
# ஆத்மாவின் அலைகள்



பாவலர் பஸீல் காரியப்பர்

# ஆத்மாவின் அலைகள்

**பாவலர் பஸீல் காரியப்பர்**

**தமிழ்ச்சங்கம்**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**பல்கலைக்கழகப் பூங்கா**
**ஒலுவில்**

| | | |
|---|---|---|
| Title | : | **"Aathmaavin Alaihal "**<br>Collection of Poems |
| Author | : | Paavalar Fazeel Kariapper |
| © | : | Author |
| First Edition | : | April 2001 |
| Cover | : | A. M. Rashmy |
| Printed at | : | Techno Printers<br>7/15A Pinthaliya Road,<br>Mount Lavinia. |
| Publishers | : | Thamil Changam<br>South Eastern University of Sri Lanka<br>University Park,<br>Oluvil. |
| Price | : | Rs. 120.00 |

## வாழ்த்துரை

பல்கலைக்கழகங்கள் அனைத்திலுமே மாணவர்களின் இலக்கிய உணர்வுக்கு வடிகாலாக தவறாமல் இலக்கிய மன்றங்கள் ஏதேனும் அமைந்து விடுதல் வழமை.

அவ்வகையில் எமது பல்கலைக்கழகத்தில் அமைவது 'தமிழ்ச்சங்கம்'. பல்கலைக்கழகம் ஆரம்பித்த ஆண்டே அதுவும் அமைக்கப்பட்டு விட்டது. தொடங்கப்பெற்று ஐந்து ஆண்டுகளே ஆனபோதும் மிகக் காத்திரமானதும் நிலைபேறுடையதுமான நூல் வெளியீட்டுப் பணி ஒன்றை ஆற்ற முனைந்திருக்கிறது அச்சங்கம்.

தென்கிழக்குப் பிரதேசத்தில் கணிப்பிடத்தக்கவரும், அதே நேரத்தில் விமர்சகர்களால் அதிகம் கவனிக்கப் படாதவருமாய் விளங்குபவர் பாவலர் பஸீல் காரியப் பர். விமர்சகர்களின் கவனயீனத்துக்குக் காரணம் அவரது கவிதைகள் ஒரு தொகுதியாய் நூலுருப் பெறாமையே.

அக்குறையை நிவிர்த்தி செய்யும் பெரும்பணியை தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நிறைவேற்றிய தில் பெருமகிழ்ச்சியுறுகிறேன். அவர்களின் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்.

*பல்கலைக்கழகப் பூங்கா*
*ஒலுவில்*
*01.04.01*

எம். எல். ஏ. காதர்
உபவேந்தர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## வெளியீட்டுரை

நமது வேரும் வேரடி மண்ணும் வெளித்தெரியாமல் போய் விடுகிற அவலம் நமக்கொன்றும் புதிதல்ல. அதற்காக ஒரு நல்ல கவிஞரை இனியும் நாம் உள்வீட்டினுள் ஒளித்து வைத்திருக்க முடியாது. வெளிவாசலின் கதவுகளைத் திறந்து, காலடி மண்ணில் கவிதைகளால் ஒரு கோலம் போட வேண்டும்.

பஸீல் காரியப்பர் நன்கு அறியப்பட்ட ஒரு கவிஞர். நம் மிடையே இன்னும் வாழ்ந்து வருபவர். இதுவரை அவரது கவிதைகளெதுவும் நூலுருப் பெறவில்லை. இந்த ஒரு காரணத்தினால் மட்டும் -காலவோட்டத்தினூடே - அவர் காணாமல் போய்விடக் கூடாது என்ற ஆதங்கம், அவரை அறிந்த எல்லோருக்கும் இருக்கிறது. எல்லோருக்கும் ஆதங்கமாக இருப்பது எமக்கு உறுத்தலாக இருந்தது. அந்த உறுத்தலின் விளைவுதான் இந்த 'ஆத்மாவின் அலைகள்'.

கிழக்கு முஸ்லிம்களின் வாழ்நிலை அனுபவங்களை இக் கவிதைகள் பேசுகின்றன. இம் மக்களது விவசாயப் பண் பாட்டுப் பின்புலம் தவிர்க்க முடியாமல் இவற்றில் ஊடு பாவி நிற்கிறது. இடையிடையே வந்து விழும் பேச்சு வழக்குக் கொச்சைகள் வசீகரம் நிறைந்தனவாய் இருக்கின் றன. பஸீல் காரியப்பர் தன் வாழ்க்கையையே கவிதையாக்கி யிருக்கிறார். ஆதலால்தான் இந்த கவிதைகள் உயிர்ப்பு மிக்கவையாக உள்ளன. இந்த அம்சங்கள் எமது பதிப்பு முயற்சியை பெறுமதிமிக்கதாக மாற்றியுள்ளமை, மகிழ்ச் சியையும் மனநிறைவையும் தருகின்றது.

நூலை வெளியிடுவதற்கு இசைவு தந்த கவிஞருக்கு நன்றி.

சிராஜ் மஷ்ஹூர்
தமிழ்ச் சங்கம் சார்பாக.

*01.04.2001*

சுமார் நாற்பது ஆண்டுகளாகக் கவிதை எழுதி வரும் நண்பர் பஸீல் காரியப்பரின் கவிதைத் தொகுதி ஒன்று மிகவும் காலம் தாழ்த்தியாவது வெளிவருவது நமது அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். நாற்பது வருடங்களுக்கு முன்னர் அவர் எழுதிய கவிதைகள் கூட இன்றும் படிக்கக் கூடியதாக இருப்பதும் நமது நல்லதிர்ஷ்டம்தான்.

1962ல் அவரது 'உயிர்' கவிதை வெளிவந்தது. இது அவரது முதலாவது கவிதை அல்ல என்று நினைக்கிறேன். ஆயினும் இத்தொகுப்பில் அதுவே முதல் கவிதையாக இடம்பெறுகின்றது. இக்கவிதை வெளிவந்த அதே ஆண்டில்தான் எனது முதலாவது கவிதை அச்சில் வெளிவந்தது. நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே எனக்கு மிகுந்த கவர்ச்சியாக இருந்த பஸீலின் இக்கவிதை இன்றும் அதே கவர்ச்சியுடன் இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

நான் எத்தனையோ முறை தீக்குச்சியைப் பற்ற வைத்திருக்கிறேன். அது ஒரு கவிதையின் அதிர்வை எனக்குள் எழுப்பியதில்லை. நண்பருக்கு அது கவிதையின் அதிர்வைத் தந்திருக்கிறது. அதை ஒரு படிமமாக்கி, அதற்குள் வாழ்வின் தத்துவத்தைச் சிறைப்பிடித்திருக்கிறார்.

குச்சி அதன் பெட்டியுடன்
கூடி உரசியதால்
விச்செனவே சுடரொன்று
வீறிட்டெழுந்து இங்கு
நின்று சுழன்று
சில நொடியுள் மறைந்தது காண்
சென்றதுவும் எத்திசையோ
சேர்ந்ததுவும் எங்கேயோ?
எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

அவரது கவிதை வரிகள் எழுப்பும் கேள்வி நம் மனதுள் அரூபமான எண்ண அலைகளை எழுப்புகின்றன. இது வெளிவந்த காலத்தில் ஒரு இளம் கவிஞனின் முதிர்ந்த கவிதையாகப் பலராலும் பேசப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளில் பல்வேறு

ரகத்திலும் தரத்திலும் சில நூறு கவிதைகளையேனும் பஸீல் எழுதியிருக் கிறார். அவற்றுள் தேர்ந்தெடுத்த சுமார் 70 கவிதைகள் - அவை எழுதப் பட்ட அல்லது வெளிவந்த கால வரிசையில் - இத்தொகுப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மிகவும் காலம் தாழ்த்தி வெளிவந்தபோதிலும், கால ஓட்டத்தினூடே பஸீலின் கவிதைகளில் பெரிய மாறுதல்களைக் காண முடியாதிருப்பினும், ஈழத்தில் புறக்கணிக்கப்பட முடியாத கவிஞர்களுள் ஒருவராக அவரது இருத்தலை இத்தொகுதி உறுதிப்படுத்துகின்றது.

பஸீல் காரியப்பரின் சொந்த ஊரான சம்மாந்துறைப் பொதுமக்கள் 1978ல் 'பாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டி அவரைக் கௌரவித்திருக்கிறார்கள். ஊர் மக்கள் அவர் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு அது. கடந்த இருபது ஆண்டுகளாக அந்த அன்பைத் தன் பெயருடன் சுமந்திருக்கிறார் நண்பர். என்னைப் பொறுத்தவரை இந்தப்பட்டம் என்னுள் எழுப்பும் பிம்பம் வித்தியாசமானது. ஒரு மரபுவழிப் புலவரின் பிம்பமே அது. நண்பர் இந்தப் பிம்பத்துக்கு ஏற்பத் தன் உருவத் தோற்றத்தையும் பின்னர் மாற்றிக் கொண்டார். ஆயினும், பஸீல் ஒரு மரபு வழிப் புலவரோ, புலவர் பாரம்பரியத்தின் வாரிசோ அல்ல. அவர் ஒரு நவீன கவிஞர். தன் கால வாழ்வை, அதன் பல்வேறு முகங்களைத் தன் கவிதை மொழியில் சித்திரமாக்கியவர். கிராமியமும், காதல் உணர்வும், தத்துவ சிந்தனை களும் இவரது கவிதைகளில் உருவம் பெற்றிருக்கின்றன. வெளிப்படை யான அரசியல் இவரது கவிதைக்குள் இல்லை. மனித நேயமே இவரது கவிதைக்குள் ஒளிந்திருக்கும் அரசியல் என்று சொல்லலாம்.

கிராமிய வாழ்வின் சில முகங்களை - துன்புற்று நொந்த சில பாத்திரங் களை - அவர்களின் உணர்வுகளை - தன் சில கவிதைகளில் படம் பிடித் திருக்கிறார் பஸீல். ஊனக்கலை, சட்டை, சுடுநீர் விழி மணிகள், வருத்து வது, தாய்மையின் தாகம், தன்பலப்பு, இரணக்கோல், சிறுக்கி, நட்டுமை போகவில்லை, தங்கம்மா முதலிய கவிதைகள் இத்தகையன. கிராமத்தின் வளமான பக்கத்தை விட அதன் வறிய பக்கத்திலேயே பஸீலின் பார்வை படிந்திருப்பதை இக்கவிதைகள் நமக்கு உணர்த்துகின்றன. இப்பார்வை யின் பின்னால் உள்ள மனிதாபிமானமும், அதன் அரசியலும், கிராமிய மணமும் முக்கியமானவை. தாய்மையின் தாகம் மட்டக்களப்பு நாட்டார் கவிப் பாணியிலேயே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அல்லையிலே பன்புடுங்கி
ஆபரணப் பாய் இழச்சு
பாலன் விளையாட ஒரு
பாக்கியம் தா ஆண்டவனே

என்ற நாட்டார் கவியில் ஒலிக்கும் அதே தாய்மையின் தாகத்துக்குப் பஸீலும் இக்கவிதையில் உருவம் கொடுத்திருக்கிறார்.

பஸீலின் சில காதல் கவிதைகள் விசேடமாகக் குறிப்பிடத் தக்கவை. எனக்கு ஒரு தேவை, அழகான ஒரு சோடிக் கண்கள், படப்பிடிப்பு, நம் காதல், இன்சுரங்கள், நிலையான நிழல் முதலியவை இத்தகையன. அவரது ஆரம்பகாலக் கவிதையான 'எனக்கு ஒரு தேவை' யில் இடம்பெறும்

பெண்ணாள் தன் நெஞ்சில் ஒரு
றைஹாலைச் செய்திடுவாள்
என்ன இனி, காவியத்தை
எடுத்து வைத்துப் பாட்டிசைப்பேன்

என்னும் கடைசி வரிகளில் சித்திரமாகும் படிமம் தற்புதுமையானது. இளமை உணர்வின் கற்பனை செறிந்தது. அவரது 'அழகான ஒரு சோடிக் கண்கள்' வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகும் இசைப்பாடல். அதன் கற்பனையும் உணர்வும் வாலிபத்துக்கே உரியன. 'நான் ஆழிச் சுழியில் மிதந்திடும் ஓடம் ' ஒரு அழகான படிமம்.

பஸீலின் கவிதைகளின் ஊடாக வெளிப்படும் பொதுவான வாழ்க்கைக் கண்ணோட்டம் மரபு சார்ந்ததோ மதச் சார்பானதோ அல்ல. நவீனத்துவமானது. அதேவேளை மதப் பொதுமையான அற விழுமியங்களைச் சார்ந்து நிற்பது. சமூக சார்பானது. இது சமூக, மத எல்லைகளைக் கடந்த ஒரு ஏற்புடைமையை அவருக்குப் பெற்றுத் தருகின்றது எனலாம். உயர்ந்த மனிதன் பற்றிய அவரது படிமம் ஒரு செருப்பின் வாயிலாக 'அரிய பிறப்பு' என்ற கவிதையில் பின்வருமாறு வெளிப்படுகின்றது.

பழசுகள் அழிந்து
புதுப் பயிருக்கு உரமாகி
புத்துயிர் பெறவும்
.......
தெம்பு தரும் வாழ்க்கைக்குத்
தெளிவான வழிகாட்டி
நம்பிக்கை ஊசிபாய்ச்சி
நலிந்த மனிதர்களைத்
துன்புறுத்தும் வலியவரைத்
துணிவோடு எதிர்த்து நின்று
காணும் பொருளில் அதன்
கர்த்தாவைக் கண்டு
மன ஏனத்தில் அமுதுண்ண

எத்தனங்கள் செய்துவரும்
தூய நெறியோன்.....

இத் 'தூய நெறியின்' மனவளம் மிக்க ஒரு பாத்திரத்தை இத்தொகுதியின் கடைசிக் கவிதையிலும் (ஹலால்) காண்கின்றோம். அறுவடையின் பின் அண்டை வயற்காரரிடம் விடை பெற்றுச் செல்லும் ஒரு விவசாயியின் குரலில் கவிதை அமைந்தாலும், அவர் பெறும் பிரியாவிடை பல தளப் பொருண்மை உடையது. இத்தொகுதிக்கு முத்தாய்ப்பாய் அமையும் இக்கவிதையின் பொருத்தப்பாடு கவனத்துக்குரியது. அது பஸீலின் மன அமைப்பையும் நமக்குப் புலப்படுத்துகின்றது.

சமகால இன முரண்பாடு, மோதல், யுத்த அவலம் பற்றிய கவிஞரின் எதிர்வினைகளைக் காட்டும் இரண்டு கவிதைகளே இத்தொகுப்பில் உள்ளன. 'மனங்கள் வெளுத்தே நாம் பேசிடுவோம்' என்ற இசைப் பாடலில் இன முரண்பாட்டின் அவலம் தாக்கமாக வெளிப்படுகின்றது.

எரிந்த தடங்கள் எங்கும் தெரிகின்றன - மனித
இரக்கம் எரிந்த சாம்பல் எங்கும் இல்லை.
பறந்து மறைந்துவிட்ட அமைதிப்புறா - இந்தப்
பக்கம் வருவதையும் காணவில்லை.

துளசி என்ற கவிதை (தமிழ் - முஸ்லிம் ) இன முரண்பாட்டின் அபத்தத்தைப் பூடகமாக, அதேவேளை தாக்கமாக வெளிப்படுத்துகின்றது. துறைநீலாவணை (தமிழ்க்கிராமம்) யில் இருந்து வேரடி மண்ணோடு கொண்டு வந்த துளசி கல்முனைக்குடி (முஸ்லிம் கிராமம்) மண்ணில் கலந்து முளைக்கின்றது.'மண்கள் கலந்தன. மனிதரைப் பழித்தன, துளசியின் இலைகள் என்னைப் பார்த்து மெல்லச் சிரிக்கின்றன' என முடிகின்றது கவிதை. துளசி இங்கு ஒரு பண்பாட்டின் குறியீடாகவே அமைகின்றது.

பஸீல் செய்யுள், வசனம், இரண்டையும் தன் கவிதைக்கு ஊடகமாகக் கொண்டிருக்கிறார். 'உயிர்' முற்றிலும் செய்யுள் வழிக் கவிதைக்கு உதாரணம் என்றால் 'பிரியம்' முற்றிலும் வசன கவிதைக்கு உதாரணம் எனலாம். எனினும் இவரது செய்யுள் கட்டிறுக்கமான மரபுவழிச் செய்யுள் அல்ல. தமிழின் யாப்பு வடிவங்களில் பஸீலுக்கு நல்ல தேர்ச்சியும் பயிற்சியும் உண்டு என்று சொல்ல முடியவில்லை. இவரது செய்யுள் ஓரளவு நொய்மையானது. இசைப் பாடல்களில் அவர் ஒரு தொடர்ச்சியான சந்த லயத்தைப் பேண முயன்றிருக்கிறார். ஏனைய செய்யுள்களில் அத்தகைய முயற்சி காணப்படவில்லை. சந்த முறிவுகளை ஆங்காங்கே காண முடிகிறது. பஸீல் தன் கவிதைகளை நினைவில் இருத்தி, அவற்றை இயல்பாக பேச்சோசையுடன் சொல்லிக்காட்டும் திறன் மிக்கவர். அவர்

தன் கவிதையைச் சொல்லும்போது அவரது செய்யுளின் சந்த முறிவுகளை நாம் உணர முடியாது.

கவிதை சீரான சந்தத்துக்குள் மட்டும் இல்லை. அது எழுப்பும் உணர்வு, சிந்தனை வீச்சு, செறிவான படிமங்களின் ஒழுங்கமைப்பு ஆகியவற்றுக்குள் இருக்கின்றது. இவ்வகையில், பஸீலின் பெரும்பாலான எழுத்துகள் கவிதையாகி இருக்கின்றன.

எதுவாயினும் வரட்டும் - ஓ நெஞ்சே
எதிர்கொள்ளச் சம்மதமா ?

என்ற அவரது பாடல் வரிகள் மன நெருக்கடிகளின்போது அடிக்கடி நினைவு வந்து எனக்கு ஆறுதலைத் தந்திருக்கின்றன. இது கவிதையின் பணிகளுள் முக்கியமானது என்று கருதுகின்றேன்.

பஸீலின் கவிதைகளில் அவரது பல்வேறு முகங்களை நாம் பார்க்கலாம். அவை நமது முகங்களும்தான். இவற்றைத் தன் ஆத்மாவின் அலைகளாக அவர் காண்கின்றார். அவற்றுள் நம் உணர்வின் அலைகளையும் நாம் காண முடியும்.

**கலாநிதி எம். ஏ. நுஃமான்**

**பேராதனை**
*26.03.2001*

## கவிஞர் குறிப்பு

ஒரு கர்ப்பிணித் தாய், தனக்குப் பிறக்கப் போகும் பிள்ளையின் உருவ அமைப்பு எப்படி இருக்கும் என்று தன்னுள் தானே எண்ணும் நிலைதான் இந்நூலைப் பொறுத்தமட்டில் என் நிலையும். இதன் உருவாக்க வேலைகளில் எனக்கு எந்தப் பங்குமில்லை. எல்லாப் பழுக்களையும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினரே ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கும் இவ்வாக்கத்திற்கு உதவிய அனைவருக்கும் என் அகம்பூத்த நன்றி.

கவிதை, கவிஞனைக் காட்டும். எனது கவிதைகளில் நீங்கள் என்னைக் காண்பீர்கள். விமர்சனங்கள் செய்யுங்கள். அவை கவிதைக் களத்தை வளப்படுத்தும்.

அன்புடன்

**327, ஹனிபா வீதி,**
**கல்முனை.**
**23.03.2001**

## அலைகள்


| | |
|---|---|
| வாழ்த்துரை | 03 |
| வெளியீட்டுரை | 04 |
| பஸீல் காரியப்பரின் கவிதைகள | 05 |
| கவிஞர் குறிப்பு | 10 |
| உயிர் | 15 |
| ஊனக்கலை | 16 |
| உயிரைத் தரமாட்டேன் | 18 |
| இல்லா இடம் நோக்கி | 20 |
| எனக்கு ஒரு தேவை | 21 |
| அரிய பிறப்பு | 23 |
| தூரத்து நாதம் | 26 |
| அழகான ஒரு சோடிக்கண்கள் | 28 |
| ஆக்கினை | 29 |
| படப்பிடிப்பு | 31 |
| நிலைமை தடுக்கிறது | 32 |
| நம் காதல் | 33 |
| பிரிய தர்ஷினி! | 34 |
| சட்டை | 36 |
| சேவல் ஒன்று கூவுகின்றது | 37 |
| பழைய புதுமை | 38 |
| அழகியமனம் | 40 |
| எதுவாகிலும் வரட்டும் | 41 |
| ஓ! ஒரு பெண்ணாள் | 42 |
| சிட்டுக்குருவியே! | 43 |
| சுடுநீர் விழிமணிகள் | 44 |
| வருத்துவது | 45 |
| தாய்மையின் தாகம் | 46 |
| அன்னை | 49 |
| தன்பலப்பு | 50 |
| காட்டுங்கள் என் சிரிப்பை | 52 |
| இரணக்கோல் | 54 |
| இரத்தமணி | 55 |
| சிறுக்கி | 56 |
| எண்ணம் இருக்கை தரும் | 57 |

| | |
|---|---|
| நட்டுமை போகவில்லை | 58 |
| இன்சுரங்கள் | 59 |
| கனிந்த நிலை | 60 |
| தங்கம்மா | 62 |
| ஆற்றில் ஒரு பூ | 70 |
| அவள் | 72 |
| ஜீவிதக் கோலம் | 74 |
| கன்னிவெயில் | 76 |
| அறம் அதுவே | 77 |
| துயர்கலந்த தேன் | 78 |
| உரையாடல் இன்பம் | 79 |
| அன்பின் மடிக்குள் | 81 |
| ஆக்கிலா தந்த மலர் | 83 |
| நிழல் | 87 |
| நிச்சயம் | 88 |
| உறவு | 89 |
| இற்ற ஓலை | 90 |
| தொடும் கலை | 91 |
| சரி! சிரி | 92 |
| பிரியம் | 93 |
| மன்னிக்க வேண்டும் | 95 |
| கிளைகளை எப்படி வடிவம் அமைப்பது | 96 |
| வாழ்க்கைக் கப்பலில் | 97 |
| நம்பு கொடி | 98 |
| மனங்கள் வெளுத்தே நாம் பேசிடுவோம் | 99 |
| தனி ஒரு பழம் | 100 |
| மலர்ச்சியாய் இரு! | 101 |
| மறைவின் உறக்கத்தில் | 102 |
| ஒன்றே | 103 |
| துளசி | 104 |
| ஈர்ப்பு | 105 |
| காலம் | 107 |
| நிலையான நிழல் | 108 |
| சந்தோஷம் | 110 |
| ஹலால் | 111 |
| நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் சில | 112 |
| பிரசுரம் பெற்ற கவிதைகள் பற்றிய குறிப்புகள் | 115 |
| நன்றி | 116 |

அண்ணர்

சில்லையூர் செல்வராசன்

அவர்களுக்கு

## உயிர்

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ

குச்சி அதன் பெட்டியுடன்
கூடி உரசியதால்
விச்சென்வே சுடரொன்று
வீறிட்டெழுந்து இங்கு
நின்று சுழன்று
சில நொடியுள் மறைந்தது காண்!
சென்றதுவும் எத்திசையோ?
சேர்ந்ததுவும் எங்கேயோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

வீணை நரம்புகளில்
விரல்கள் விளையாடத்
தேனாம் இசையுண்டோம்
சேர்ந்ததுவும் எங்கேயோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

சுழன்ற சுடராமோ
சுவைத்த இசையாமோ
தளர்ந்த உயிர் உடலைத்
தவிர்த்த நிலை எதுவோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

1962

## ஊனக்கலை

நடந்த களைப்பெனக்கு
நாவரண்டு கண்மயங்க
மடந்தை ஒருத்தி அவள்
மனை முன்னர் வீற்றிருக்க
இன்பம் சுரந்திடவே
இல்லத்தைச் சென்றடைந்து

''தண்ணீர்தா தங்கச்சி
தயவு செய்து'' எனக் கேட்டேன்
சும்மா இருந்தாளே!
சோர்ந்த என்னைப் பார்த்தும் அவள்
என்னே! இவளும் ஓர்
அன்னைக் குலத்தவளோ?
தாகம் மிகுந்தவர்க்குத்
தண்ணீரும் ஈயாளோ?
நோகும் உளத்துள்ளே
நூறுவிதம் எண்ணி விட்டேன்

''உம்மா! இவருக்குத்
தண்ணீர் கொடு'' என்றாள்
உம்மா இவளுக்கோர்
ஆயாளோ ஐயய்யோ!

முன்னே முகிழ்ந்த இரு
மொட்டுக்கள் சட்டையினை
இன்னா கிழித் தெறிவேன்
என்றே கிளர்ந்து எழ
முன் அழகை மறைப்புக்குள்
மூடாதும் விட்டிருந்தாள்.
என்ன பொடிச்சி இவள்
இப்படியா இவ்வயதில்.

எண்ணங்கள் ஓடுகையில்
ஏனத்தில் தண்ணீரைக்
கொண்டு வந்து தந்தாள்
அக் கொடி அவளைப் பெற்றவளும்.

குனிந்து மிடறு இரண்டு
குடித்து முடியு முன்னே
குனிந்து மகளாரைக்
குழந்தை எனத் தூக்கினளே

''ஏன் ஏன் இது'' என்றேன்
ஏறெடுத்துப் பார்த்த அவள்
''நான் என்ன செய்ய இவள்
நடை வாதம் கொண்டது'' என்றாள்

கால் வழக்கமில்லாத
கன்னி என்ன செய்திடுவாள்?
ஐயோ நான் பாவி
அவளில் எரிந்து விட்டேன்

அழகாய்க் கலை வடித்து
அதில் ஊனம் வைத்துவிட்ட
இளகா மனச் செயலும்
ஏனோ?

1962

## உயிரைத் தரமாட்டேன்

என்னை அணுகாதே! உயிரை
எட்டிப் பறியாதே
என்னை உலவவிடு! எந்தன்
இளமை பலிதமுற

பெற்றோர் உடன்பிறந்தோர் நெஞ்சில்
பிணைந்த மனிதர்க்கெல்லாம்
உள்ள ஓர் ஊழியனாய் இன்னும்
உயிர்வாழ விரும்புகின்றேன்

நீண்ட நெடுவழியில் நெஞ்சை
நிமிர்த்தி நடைபோடுகையில்
ஏன்டா அழைக்கின்றாய் நீ
இரக்கம் மிகுந்தவனோ?

ஆஹா! கவிதை பண்ணும் இனிய
ஆர்வம் தனை அளித்தாய்
சாகாக் கலை படையாது நான்
சாக விரும்புவனோ?

என்சிறு ஆற்றலினால் இங்கு
இனியவை பண்ணிடுமுன்
என்னை அழைக்காதே! நான்
உயிரைத் தரமாட்டேன்.

பருவ உணர்வளித்தாய்! உள்ளத்தில்
பாவைக்கு மஞ்சமிட்டாய்
இறுகிப் பிணையவில்லை! அந்த
இன்பமும் காணவில்லை.

என்னையே காத்திருக்கும் அவளை
ஏமாற்றி நான் வரவோ?
உன்னிடம் வந்திடுவோம்! இடையில்
உயிரைத் தரமாட்டேன்.

உலகப் படைப்புகளில் நான்
உயர்கல்வி கற்க வேண்டும்
கலையைப் படைத்தவனை நான்
கண்டு தெரிய வேண்டும்.

பழுத்தால் காம்பறுமே நான்
பழுத்த பழமாமோ?
இழுக்கு உந்தனுக்கே பிஞ்சிலே
என்னை உதிர்த்து விட்டால்

என்னை அணுகாதே நான்
உயிரைத் தரமாட்டேன்.

1962

# இல்லா இடம் நோக்கி

காற்று ஏன் வேகமாய் வீசுவதோ எனக்
காரணம் கேட்கிறேன் கேட்டதைக் கேட்டவன்
காற்றின் அமுக்கம் குறைந்த இடத்தினுக்காக
விரையும் கதி எனக் கூறினன்.

இல்லா இடத்திற்கு ஏகிடும் காற்றென
நல்மனம் கொண்டவர் நம்மில் பெருகவே!

தொட்டில் தேங்கிய நீரினைப் போக்கியே
துப்புரவாக்கிடச் செல்கிறேன் செய்கிறேன்
மட்டம் குறையினும் பாத்திரம் கொண்டு நான்
வெட்டி எடுத்த வெறுமையைக் காண்கிலேன்.

இல்லா இடத்திற்கு ஏகிடும் நீரென
நல்மனம் கொண்டவர் நம்மில் பெருகவே!

காற்றென நீரெனக் காண மனிதரைக்
காத்துக்கிடக்கும் காலமே! நாளை நீ
நேற்றுக்கண்ட மனிதரும் சாகுவர்
நெஞ்சக்கனலை உமிழ்வாய் இங்கு ஏழ்மையின்
சீற்றம் அவர்கள் சிந்தையை மாற்றுமே
ஜெய, ஜெய, ஜெயவெனப் போர்வருமுன்னால்

இல்லா இடத்திற்கு ஏகும் இயற்கை போல்
நல்மனம் கொண்டவர் நம்மில் பெருகவே.

1963

## எனக்கு ஒரு தேவை

நெஞ்சமுகில் கனக்கும்
நிறம் மாறிக் கருமை கொள்ளும்
பஞ்சாய் மிதந்த அது
பாரத்தைத் தாங்க ஒண்ணாது
அங்கிங்கு அலைந்தாடும்
அடுத்து மழை பொழிவது
எங்கே? இடம் தெரியாது
எனக்கு இது ஒரு தண்டனையா?

பேனாவின் மூலம் அதைப்
பெய்தால் பயன் தருமே
ஆனாலும் நெஞ்சமழை
அத்தனையும் மற்றவர்க்கா?
கட்டுரையில் கதைகளிலே
கவிதைகளில் சொல்ல ஒண்ணாக்
கட்டில் கதைபலவும்
கருத்தில் எழல் உண்மையல்லோ

கதைபடிக்கும் போதுவரும்
காட்சிகளைப் பாத்திரத்தை
விதவிதமாய் ரசிக்கும் இந்த
விந்தை மனிதர் அதை
நடைமுறையில் காட்டிவிட்டால்
நாப்பிளக்கச் சலசலக்கும்
படைகளிடம் என்மனத்தின்
பாரத்தைச் சொல்லுவதா?

என்னை உணர்ந்திடும் ஓர்
உயிர்வேண்டும் அவ்வுயிரே
பெண்ணாய் இருந்துவிட்டால்
பெரும் பாரம் நீங்கிவிடும்
குறை நிறைகள் எல்லாமே
கூடி என்னைக் காப்பவளின்
அறையுள்ளே வாழ்ந்துவிடும்
அவள் அறிந்துபேணிடுவாள்!

என்னை என் உணர்வுகளை
என் இதய வேட்கைகளைக்
கண்ணாடி போல் அவளில்
கண்டு மகிழ்ந்திருப்பேன்

இன்பக் கிறுகிறுப்பில்
என் மடியில் சாய்ந்திடுவாள்
அண்ணாந்து விண்ணோக்கி
அயர்ந்து பெருமூச்சிடுவாள்
பெண்ணாள் தன் நெஞ்சில் ஒரு
றைஹாலைச் செய்திடுவாள்
என்ன இனி, காவியத்தை
எடுத்து வைத்துப் பாட்டிசைப்பேன்

1963

*றைஹால் - புத்தகப் பலகை*

## அரிய பிறப்பு

தூய நெறியோனைச்
சுமந்து சுமந்து உருவே
தேய்ந்து நான் என்னைத்
தேய்த்தழித்துக் கொள்ளுகிறேன்

எண்ணத்தில் தூய்மையுடன்
இறைவனிடம் நித்தநித்தம்
கண்ணீர் பெருக்கிக்
கரைந்துருகி ஆட்கொண்ட

தீய உணர்வுகளைத்
திசை மாற்றும் இச்சைகளை
சின்னத்தனங்களினைச்
சீரழிவின் வேள்விகளை
எண்ணி உருகி மனம்
இளகித் தெளிவு பெற
பழசுகள் அழிந்து
புதுப் பயிருக்கு உரமாகி
புத்துயிர் பெறவும்
வரும் புதுவாழ்வில்
பொருள்பட வாழவும்
எத்தனங்கள் செய்யும்
இதயத்தைத் தாங்கியுள்ள
தூய நெறியோனைச்
சுமந்து சுமந்து உருவே
தேய்ந்து நான் என்னைத்
தேய்த்தழித்துக் கொள்ளுகிறேன்.

தன் குறைநிறைகளினைத்
தானே அறிந்து கொண்டு
சுண்ணாம்பு பூசாமல்
சுரண்டி அழுக்கு அகற்றிப்
பொன் மனத்தைப் பெறும்வழியில்
போர்க்களங்கள் கண்டு வென்று
தன்னைப் போல் மற்றவரைத்
தனித்தனி உணர்ந்து கொண்டு
துன்பமுறும் மனிதருக்குத்
தொண்டு செய்து பாவிகளில்
அன்பு பாலித்து அவர்களுக்கு
அருள் மனத்தால் மருந்து செய்து
தெம்பு தரும் வாழ்க்கைக்குத்
தெளிவான வழிகாட்டி
நம்பிக்கை ஊசிபாய்ச்சி
நலிந்த மனிதர்களைத்

துன்புறுத்தும் வலியவரைத்
துணிவோடு எதிர்த்து நின்று
காணும் பொருளில் அதன்
கர்த்தாவைக் கண்டு
மன ஏனத்தில் அமுதுண்ண
எத்தனங்கள் செய்துவரும்
தூய நெறியோனைச்
சுமந்து சுமந்து உருவே
தேய்ந்து நான் என்னைத்
தேய்த்தழித்துக் கொள்ளுகிறேன்.

என் எஜமான் என்னை
இழுத்தரைத்துத் தேய்க்கின்றார்
என்றாலும் நான் எள்ளளவும்
ஹிம்சை எனக் கொண்டதில்லை

புனிதர்கள் வழியில் தூய
பணிகளைச் செய்யும் இந்த
மனிதருக்காய்த் தேய்தல்
மகிழ்ச்சி நான் பெற்ற வரம்.

என்றோ தொழும் பள்ளி
ஏறுவாயில் தனிலே
அன்று செருப்பொன்று
அடியேன் தனைப்பார்த்து
மெல்ல நகைத்ததடா
மின்னியதோர் ஒளிக்கீற்று

உள்ளே இருக்கும் அந்த
ஒரு மனிதருக்காகவேனும் அந்தப்
பள்ளி மகிழ்ந்திருக்கும்!
பணிசெய்யக் காத்திருக்கும்
செருப்பு அரிய ஒரு பிறப்பு.

1963

## தூரத்து நாதம்

அமுத இசையுள் நான்
ஆழ்ந்துவிட ஒண்ணாதோ?

தூரத்து இசைத்துளி என்
செவியில் கலக்கையில் ஏன்
யாரிவரோ கூடி அதை
அலைக்கழியச் செய்கின்றார்

செவியினையே தீட்டுகிறேன்
சேச்சே! எங்கே அது
இவர் கூச்சல் ஓயாதோ
இனிமையிலே ஒன்றிவிட

கூவும் குயில் இசைத்தேன்
குழைத்துத் தருகையில் ஏன்
பாவக் குரல் எழுப்பிப்
பாதகத்தைச் செய்கின்றார்.

சித்தம் ஒரு முகமாய்ச்
சேர்ந்து லயிக்கையில் ஏன்
கத்திக் கருச்சிதைக்கக்
காதருகே வந்தனரோ?

அண்ட சராசரத்தை
ஆளும் ஒலி என்றாலும்
அண்மை இரைச்சலினால்
அதில் ஒன்றாதிருப்பதுவோ?

பக்கத்து நச்சரிப்பின்
பழி சிறிதே என்றாலும்
சொக்கும் இசையலையின்
தொடர்பை அறுக்கிறதே

அமுத இசையுள் நான்
ஆழ்ந்துவிட ஒண்ணாதோ?

1965

## அழகான ஒரு சோடிக்கண்கள்

அழகான ஒரு சோடிக்கண்கள் - அவை
அம்புகள் பாய்ச்சி உளமெல்லாம் புண்கள்!

புவியியல் கற்றிடும் வேளை- அவை
புகையுள்ளே மின்னிச் சிரித்திடுங் காலை
தவித்துத் துடிப்பதென் வேலை- கல்வி
தங்குவதெங்கே மனமொரு பாலை!

ஆட்சியியல் மறு பாடம் - நான்
அங்கிருப்பேன் மனம் எங்கோ ஓடும்!
ஆட்சி செய்யுமுறைச் சாடும்- நான்
ஆழிச் சுழியில் மிதந்திடும் ஓடம்!

தாய்மொழிப் பாடம் நடக்கும் - நறை
தாங்கிய கண்களோ பின்னலடிக்கும்!
'ஏய்'! என்று என்னைப் பிடிக்கும்- மனம்
எப்படிக்கண்ணே பாடம் படிக்கும்....?

தத்துவப்பாடம் நடக்கும், அவை
தத்தித் திமிக்கி இமைகள் மடிக்கும்!
வித்தையில் பித்துப்பிடிக்கும்- நம்
வீட்டாரறிந்தால் கன்னந் தடிக்கும்!

1966

## ஆக்கினை

தூக்கி எறிய உன்னைத்
தொடுகின்றேன்! தொடும் பொழுதோர்
ஆக்கினை என் உள்ளத்துள்
ஆ! அதனைச் செய்வேனா?

பட்டுச் சிறகடித்துப்
பறந்துவரும் பறவைஇனக்
கொட்டு முழக்கத்தால்
கூதலிடை கண்விழிப்பேன்

மேலை முறுக்கிவிட்டு
மெதுவாய் எழுந்திருக்கும்
வேளை உனை நினைப்பேன்
வெட்டென்று எழுந்து கரம்
பற்றிப் பசைசேர்த்து
பட்டென்று இதழ்பிரித்துச்
சுற்றிக் குடைந்ததனால்
தும்பகன்று போன உன்னைத்
தூக்கி எறிந்திடவே
தொடுகின்றேன்; தொடும் பொழுதோர்
ஆக்கினை என் உள்ளத்துள்
ஆ! அதனைச் செய்வேனா?

வேக்காடு தந்தேன் நான்
விளக்கம்தான் நீ தருவாய்
நோக்காடு என்று என்னில்
நொந்தாயா? இன்றோ நீ
பாடுபட்டு தேய்ந்த ஒரு
பாட்டாளியாகிவிட்டாய்
பாட்டுக்குப் பரிசு பெறாத
பாவலனாய் ஆகிவிட்டாய்

தொல்லை என நினையாது
தொழில் புரிந்து நித்த நித்தம் என்
பல்லைத் துலக்கிப்
பளிச்சென்று வைத்த உன்னைத்
தூக்கி எறிந்திடவே
தொடுகின்றேன்; தொடும் பொழுதோர்
ஆக்கினை என் உள்ளத்துள்
ஆ! அதனைச் செய்வேனா......?

1967

## படப்பிடிப்பு

வருகிறேன் வருகிறாய் வந்ததும் நாம்
வழமைபோல் அஞ்சித் தவிக்கிறோம் நான்
இரவிது மறைவிது என்கிறேன் நீ
இல்லை பிறர் கண்டால் என்கிறாய் வானில்
இருள்அற மின்னல் அடித்ததே இந்த
இறைவன் புகைப்படக் காரனோ? அந்தக்
கருவி எம்மைப் படமாக்கிட நம்
களவு பிடிபட்டு விட்டதே இனி
மறைவதில் என்ன பயனடி! வா
மாந்தரும் நம்மை அறியலாம்.

1967

## நிலைமை தடுக்கிறது

பனை ஓலை ஒன்றில் ஒரு
பொன்வண்டு நடக்கிறது
சிறகை அகட்டி ஒரு
மலரை அழைக்கிறது

மலரும் அசைகிறது
மனமும் இசைகிறது
நிலமை தடுக்கிறது பெரு
நெருப்பாயிருக்கிறது

பனைஓலை ஒன்றில் ஒரு
பச்சைக் கிளி நடக்கிறது
மழலை மொழியாலே ஒரு
கனியை அழைக்கிறது

கனியும் அசைகிறது
மனமும் இசைகிறது
நிலைமை தடுக்கிறது பெரு
நெருப்பாயிருக்கிறது.

1968

## நம் காதல்

நம்காதல் இனியது புனிதமானது அது
அந்தரங்கமானது

அத்தர் வாசனையாக அமைந்து அது
சுகந்தம் பரப்பட்டும்
பித்தம் பிடித்தலையும் போதையாவதைப்
பொருந்தவும் மாட்டோமே

நம்காதல் இனியது புனிதமானது அது
அந்தரங்கமானது

சதாவும் ஒரு சங்கீதமாக நமக்குள் அது
சஞ்சரித்து சஞ்சீவியாகட்டும்
சதாவும் மனம் புணரும் அருங்கலையாய்
வாழ்க அது.

நம் காதல் இனியது புனிதமானது அது
அந்தரங்கமானது.

சித்தத்தால் சங்கமித்து சங்கேதபாஷையினால்
நித்தம் கதை பயிலும் நாம் இனி
முத்தம் பொழிவோம் அதற்கு உடன்
முறையாக நாள் குறிப்போம்.

நம்காதல் இனியது புனிதமானது
அது அழிவில்லாதது.

1970

## பிரிய தர்ஷினி!

ஆனந்தமானவளே! என்
அகம் பூத்த செழுமலரே!
ஏன் இந்தத் தூரம்
இன்னும் தொடர்கிறது?

தூரத்தில், வெகு தூரத்தில்
சிறு புள்ளியாகவேனும் நீ தெரிந்தால்
தூரம் தொலைந்து விடும் நீ என்
தோளருகில் வந்திடுவாய்
என்னை விழுங்கும் உன்
கண்களின் கனிவு என்னுள்
கருணையாய்த் திரண்டு வரும்!

ஊரெல்லாம் கூடி
ஒன்றாக நின்றாலும் உன்உருவம்
தனித்துவமாய்த் தெளிவாய்த் தெரியும் எனக்கு
என்னுள் ஒரு தாகத்தை உண்டுபண்ணும்

கூர்மையாகவும் மிக ஓர்மையாகவும் நீ
குறுஞ்சிரிப்புக்காட்டி என்னை வாட்டிட இந்தத்
தூரம் உனக்குத் தோதாய் இருக்கிறதா?
நேராகக் கண்டபோது நீ!
நிலத்தில் என் முகம் பார்த்த
பேறுகளையும் நான்
ரசிக்கின்றேன்.

ஊறும் உணர்வுகளை உன் உள்ளத்துள் நீ
உரத்துக் கதைப்பது என் காதுகளில்
தெளிவாகக் கேட்கின்றது.
ஆழத்தில் என்மனத்தில் எழும் வினாக்களுக்கு
நீ தரும் விடைகள் உடன் வந்து சேர்கின்றன
வீரம் தருகின்றன அரிய
விளக்கங்கள் தெளிகின்றன.

பண்ணும்போது மட்டும் இனிப்பது
சிற்றின்ப மென்றால்
எண்ணும் போதெல்லாம்
இனிப்பதுதான் பேரின்பமா?

பேரின்பம் தரும் என் பிரியதர்ஷினியே
பிரிவு கொடிது நமக்குள் பெரும் கொடிது.

1970

## சட்டை

பட்டுத்துணி எடுத்துப் பல
வெட்டுக் கிறுக்குகளால் துளை
இட்டுத் தளிர்மேனி வெளிக்
கிட்டுத் தெரியவரும் சிறு
சட்டை அணிந்த பெண்கள்
சஞ்சரிக்கும் பூமியிலே

அட்டைக்கடி அழுத்தப் பன்
கட்டைத் தலைசுமக்கக் கை
எட்டி அதைப் பிடிக்க ஓ!
எரிவெயிலிற் செல்லும் இவள்
சட்டை இடுவலிடை அந்த
மொட்டுத் தெரிந்து விழி
பட்டுத் தெறித்ததனால் என்ன
பெட்டை இவள் என்றே
பிழையாக நினைக்காதீர்

உண்மையிலே இவளிடத்தில்
ஒழுங்கான சட்டை இல்லை
பன்பிடுங்கும் தொழிலால்இப்
பாவைபெறும் ஊதியத்தால்
இன்னும் ஒரு சட்டை தைக்க
இயலவில்லை

1971

## சேவல் ஒன்று கூவுகின்றது

சேவல் ஒன்று கூவுகின்றது
செக்கிருட்டு
ஆவல் அரண்டெழுகின்றது உன்வீட்டை
அண்டி வரும்போது

கதவு ஜன்னல்கள் மூடப்பட்டுள்ளன
கதைச் சப்தம் இல்லை
கண்ணுறங்கி விட்டது ஊர்
நீயும் உறக்கத்திலா? அந்தப்
பாயில் படுத்திருப்பாய்!

விருந்துகளைத் தாங்கி
வெட்கித்த வேதனையை
மறந்து துயில்கின்றாயா மலரே!
ஓ! அந்தத்
தலையணை உன் முகத்தை எப்படி அணைக்கும்?
கலைந்த கூந்தல் அமைப்பின் அலைகள்
கைவிரல் நெஞ்சில் பதியும் நிலைகள்
அருந்தேன் சுரக்கும் அழகின் சுளைகள்
புரண்டு நெழியும் கலையின் சுழிகள்
அரண்டு எழுகின்றன நெஞ்சினில் அன்பே!

இனியும் நமக்குள் பிரிவு கொடியது
சேவல் அதோ கூவுகின்றது! செக்கிருட்டு
ஆவல் உன்னோடும் உடல்
அடியடியாய்ப் பெயர்கிறது.

1971

## பழைய புதுமை

புதுமனை; முதலிர வெனுசுவை மிகுதினம்
பதுமையாய் அவள்எனில் படரவே வருகிறாள்
புதுவித அலை என துளமெனும் பரவையிற்
கொதிகொள அவளுரு பருகின இருவிழி

சுடரென அவளிடை அசையவே; தளிர் இதழ்
அடிகளும் வெறிகொள சொருகிய மாவிழி
இடையிடை எதிர்கொள; இணையவே; எமதிடம்
விடை பெற அனைவரும் விளைவினித் தனிமையில்

பொழுதறி கருவியின் பொடி நடை ஒலி; என்
அழகியின் அரையிடைச் சரிகையின் சரசர
ஒலிமனம் படபடவென இள எணமெலாம்
பலிதமே! அதனிடை மனமொரு திசையிலே

இன்றிங் கெனக்கு முதலிர வன்றெனை
ஈன்று வளர்த்தவரும் இதை
நன்றே பயின்ற நயத்தால் இன்று
நானும் புலம்புகிறேன் அதன்
முன்னவர் பாட்டன் பாட்டியும் மற்று
மூத்தோர் முதியோரும் ஆதி
அன்னை நம் அவ்வா ஆதம் என்போல்
அடைந்த முதலிரவே

அவர்வழி இன்றிங்கெனக்குப் பின்என்
அன்புக் கண்மணியாள் மடி
தவழப் போகும் குழந்தையும் ஒருநாள்
தப்பாதிதைப் பெறுமே பின்
அவர்வழி முதலிரவாயிரமாயிரம்
அகிலம் தனிலல்லோ எந்தக்
கவலையும் மாயும் களிப்பினை உலகம்
காணும் உள்ளவரை

காட்டு விலங்கொடு விலங்காய் வாழ்ந்தோர்
கண்ட சுவை இதுவாம் பின்
வீட்டையும் ஆக்கி விரிகடல் ஆய்ந்தும்
விண்வெளி சென்றவரும் இதைக்
காட்டிலும் புதிதாய் சுவை எது கண்டார்
காணார் இனிமேலும் தன்
பாட்டிற் குலகம் மாறிடினும் சுவை
பண்பும் மாறுவதோ?

1972

## அழகியமனம்

மனிதனென்னும் நல்ல மனத்தினிலே - மற்ற
மனிதருக்கான ஓர் இடமிருக்கும்.
துணிவிருக்கும் பிறர் துயர் துடைக்கும்- அவர்
உயர்வினுக்கான போர்ப்படை படைக்கும்.

மக்களின் வாழ்வினைப் புத்தகமாய் - அது
மாண்புடன் கொள்ளும் நிச்சயமாய்
தக்கதில்லை பலர் துக்கநிலை - சிலர்
சக்கை எனில் இதோர் பக்கநிலை.

கலவரங்கள் சும்மா வருவதில்லை -இதன்
காரணம் தேர்ந்து அதை அழித்து விடும்
நிலைவரவே மக்கள் துயர் அறவே - பலாச்
சுழையெனவே அவர் சுவையுறவே!

எடுத்துரைக்கும் அதில் இதம் இருக்கும்- அதைத்
தடுத்தடித்தால் வெடி வெடித்தழிக்கும்
படித்திருக்கும் வெற்றி படைத்திருக்கும்- மக்கள்
வடித்திருக்கும் வழி இனித்திறக்கும்.

பனித்திருக்கும் கண்கள் பணித்திருக்கும் - அவர்
பிணியகற்றும் பணி பிணைத்திருக்கும்
தனித்திருக்கும் சக்தி இணைத்தெடுக்கும் - அது
கணித்திருக்கும் யுக்தி இனிப்பிறக்கும்.

1972

## எதுவாகிலும் வரட்டும்

எதுவாகிலும் வரட்டும்! ஓ நெஞ்சே
எதிர்கொள்ளச் சம்மதமா? ஓ நெஞ்சே
எதுவாகிலும் வரட்டும்.

சதிகாரன் என்றுன்னைத் தூற்றட்டுமே
உண்மை தெளிவான போது அவர் வாழ்த்தட்டுமே
எதுவான போதும் ஒரு மாற்ற மில்லா எந்த
இடர்வந்த போதும் ஒரு சீற்றமில்லா நெஞ்சே
எதுவாகிலும் வரட்டும்

எதிராக வந்தாலும் உண்மை சொல்லு எந்த
எதிராளி மீதினிலும் கருணை கொள்ளு
பொதுவாக இதமாகச் சொல்லி விடு! உண்மை
புரியாத பேர்களினைத் தள்ளிவிடு நெஞ்சே
எதுவாகிலும் வரட்டும்

அதிகாரம் உள்ளவர்கள் வையட்டுமே -எந்த
அநியாயம் என்றாலும் செய்யட்டுமே
அதிகாரம் ஒருநாள் தோற்றுவிடும்
அன்பு பிரதானம் என்ற நிலை பூத்துவிடும் நெஞ்சே!
எதுவாகிலும் வரட்டும்

சத்தியம் சோதனைக்குள் ஆவதுண்டு அதன்
சரித்திரம் வெற்றியாய்ப் போவதுண்டு
நிச்சயம் ஒருநாள் வாழ்க்கை வெல்லும்! அது
நீ வாழ்ந்த வாழ்க்கையின் தன்மை சொல்லும் நெஞ்சே
எதுவாகிலும் வரட்டும்.

1972

## ஓ! ஒரு பெண்ணாள்

ஓடிடும் பஸ்ஸுக்குள்ளே
ஓ! ஒரு பெண்ணாள் நின்றாள்
வாடிய முகமும் தோளில்
வளர்த்திய சேயுமாய்ச் சற்று
ஆடிய போதிலெல்லாம்
அடுத்தவர்க்கு அணைப்பேயாகி
ஓடிடும் பஸ்ஸுக்குள்ளே
ஓ! ஒரு பெண்ணாள் நின்றாள்.

ஆசனத்தில் இருந்த அன்பர்
அடுத்திருந்தவரைப் பார்த்துப்
பேசினார் ''உங்கள் இனப்
பெண்தானே எழுந்து சற்று
இடம்தன்னைக் கொடுங்கள்'' என்றே
இரங்கினார் பஸ்ஸுக்குள்ளே
அடைபட்ட பெண்ணில் அவர்
அனுதாபம் பெருகி நின்றார்

தாய்! ஒரு சேயினோடு
தவிப்பதில் பேதம் காணும்
நாயுனை என்ன என்பேன்
நாமெல்லாம் மனிதரல்லோ?

1973

## சிட்டுக்குருவியே!

சிட்டுக்குருவியே நீ -எந்தன்
செத்தைக்குள் வந்து நின்றே
கத்திக் கதறுவதால் -துயர்
மெத்தப் பெருகுவதேன்...?

பட்டுச் சிறகடித்தே -இரை
பார்த்துத் திரிகையிலே
வட்டைப் பக்கம் போனால் - பிள்ளைகளின்
வாப்பாவை நீ வரச்சொல்.

செட்டிட வட்டைக்குள்ளே ஒரு
சூட்டுக் களவட்டியில்
கட்டாயம் நிற்பார் என் கணவரைக்
கடுதியில் நீ வரச்சொல்

நெல்லுக்குள் நின்றுழைக்கும் - அவர்
பிள்ளைகள் பட்டினியால்
கொள்ளிக்குள் பூக்களெனப் - படுந்துயர்
சொல்லியே நீ வரச்சொல்.

1973

## சுடுநீர் விழிமணிகள்

நியாஸ்! நீ என்னை மன்னிக்க வேண்டும்
உன் நிலைமை அறியாமல் நடந்து விட்டேன்

கொப்பி இல்லாத பிள்ளைகளை நான்
கூப்பிட்ட போது நீதான் எழுந்தாய்
எப்போதும்போல் கரும்பலகைக்குள்
ஒளிக்கும் பாங்கிலே நீ நிற்கின்றாய்
''எத்தனை நாட்களாய்ச் சொல்கிறேன்'' என்றே
எரிகிறேன் பூவரசந் தடியை எடுக்கிறேன்
இத்தனை சுடுநீர்த் துளிகளைக் கண்களுள்
எப்படி எங்கே வைத்திருந்தாய் நீ
சப்தம் போடவா வாய்திறக்கின்றாய்?
சரி சரி! என்றுன் கதையைக் கேட்கிறேன்

''வாப்பாக்குக் கண்தெரியா
உம்மாக்கிட்டக் காசில்ல
கூப்பனை வித்துப்போட்டு
கொப்பி வாங்கித் தாரன்'' என்றா

சொல்லி அழும்போதினில்
அச் சுடுநீர் விழிமணிகள்
முள்ளாக நெஞ்சுக்குள்
முனை எடுத்துப் பாய்ந்ததடா

நியாஸ்! நீ என்னை மன்னிக்க வேண்டும்
உன் நிலைமை தெரியாமல் நடந்துவிட்டேன்.

1973

## வருத்துவது

நெல்வயலுக்குள்ளே
நெருங்கி வளர்ந்திருந்த
புல்பிடுங்கி விட்டுப்
போகின்ற பெண்ணாளின்
கன்னத்தில் வெள்ளிக்
காசுகளைப் போல் தேமல்
என்னுள் ஒரு வேதனையை
ஏன் எழுக என்றதுவோ?

மருந்தொன்று அறிவேன் அம்
மறு நீங்கச் செய்திடலாம்
அறிந்ததனைச் சொல்லிவிட
ஆவல்மிகக் கொள்ளுகிறேன்

மெல்ல வழியில் இறங்கி
மெதுவாகச் சொல்லுகையில்
கொல் லென்று சிரித்தாள்! பின்
குளுமையுடன் தலைநிமிர்ந்து
''வருத்துவது எங்களது
வயிறே முகத்தேமல்
உறுத்தவில்லைக் காக்கா!'' என
ஒரு பதிலைச் சொல்லிவிட்டாள்!

1973

## தாய்மையின் தாகம்

கரைவாகு வட்டை நெற்
கதிர்போல என்மடியை
நிறைவூட்டும் பிள்ளைமுகம்
நீ தருவாய் ஆண்டவனே!

அறுகம்பைக் காட்டிற்கோர்
ஆளனுப்பித் தேன் கொணர்ந்து
'இரும்புப்பால்' வைத்தே நான்
இன்புறுவ தெக்காலம்....?

கூறைப்பிடவை தன்னைக்
கோலியே தொட்டிலில் கட்டி
ஆராரோப் பாட்டிசைத்தே
ஆனந்தங் காண்பதென்றோ...?

பொன்னால் அரை மூடியைப்
போட்டே அரை ஞாணிலிடப்
பெண்ணடியொன்றென் வயிற்றில்
பெற்றுவிட மாட்டேனோ...?

பாத்திமாவின் நாற்பதன்று
பாய் கழுவி நீராடிக்
காத்தாங்குடிப் பிடவை
கட்டி மகிழ்வதென்றோ.....?

காதுகுத்துக் கல்யாணம்
காணவந்த பெண்டுகளே
வாதுக்குக் குரவையிட்டேன்
வசை தீர்ப்பதெக் காலம்......?

பள்ளவெளிக் காலையிலே
பால்கறந்தே கொண்டுவந்தென்
பிள்ளைக்குத் தமிழ் சேர்த்துப்
புகட்டுவதும் எக்காலம்.....?

பிள்ளைக் கிளிமொழியைப்
பிழிந்தே செவியிருக்கக்
கல்லோயாப் பள்ளக்
கரும்பு தின்றாற் போலிருக்கும்!

மட்டுநகர் வாவியிலே
மகிழ்ந்திசைக்கும் மீனினங்கள்
வெட்கிடவே என் மகளின்
விழியழகைக் காணேனோ.....?

மாவால் ஆராத்தி செய்து
மகளுக்குக் கண்ணூறும்
நாவூறும் நான் கழிக்கும்
நாள் வருவதெக் காலம்.....?

எட்டிப் பிடித்துள்ளே
இருந்து பழக ஓலைப்
பெட்டி இழைத்து நிறப்
பூப்போட மாட்டேனோ....

குஞ்சு பிடி மாங்காய் சதங்கை
கோர்த்து வெள்ளி ஞாணிலிட்டுப்
பிஞ்சுமகன் தத்தி நடை
போட்டுவரக் காணேனோ....?

கற்பன் பாய்க் கட்டினிலே
காலிடறிச் சாய்ந்ததனால்
புற்பன் தட்டுள்ளிருந்த
பொரி சிதறல் எக்காலம்....?

மருதமுனைச் சாறனொன்றை
மடித்தே உடுப்பாட்டி
வரிசை முகம்மதுக்கோர்
வார் அணிவதெக் காலம்......?

ஆட்களோடு பார்க்க வந்த
அக்கரைப்பற்று ராத்தா
நாட்டுக் கவியிசைத்தே
நல்வாழ்த்துச் சொல்வதெப்போ?

சவளக் கடை அரிசி
ஆலைப் புகை போக்கி
கவலை மிகுந்த மனக்
கருகலினைக் கக்குவதோ....?

வாழைச்சேனைக்கனுப்பும்
வைக்கோலாய்ப் பிறந்திருந்தால்
பாழும் உடம்பாலிந்தப்
பார் பயனைக் கண்டிருக்கும்!

சம்மாந்துறை அரிசைச்
சாத்தி வைத்த பல்லொளிர
உம்மா வெனக் கூவும்
உயிர் பிறப்பதெக் காலம்......?

1973

இரும்புப் பால் - பிள்ளை பிறந்தவுடன்
முதன்முதலில் நாவில் வைக்கும் தேன்

## அன்னை

அன்னை எனும் உயர் அன்பிடையே மனம்
ஆறுதலாய்த் துயிலும் - அந்த
அன்பு மழை பெய்தே ஓய்ந்து விட்டால் - இங்கு
ஆட்சி செய்யும் அனலும்

வற்றி உலகெல்லாம் அன்பின் துளிகளெல்லாம்
வரண்டு ஒழிந்தபோதும்- நம்மைப்
பெற்றவள் நெஞ்சிலே அற்புதப் புனலாய்ப்
பிரியம் வழிந்தோடும்

குற்றம் புரிந்ததனால் கொடும்பழி வந்ததனால்
சுற்றம் வெறுத்தபோதும்- அன்பு
சற்றுமே மாறாத தாய்மை மனம் நல்ல
சாந்தி மொழி கூறும்.

எங்கினிப் போவேன் என்ற நிலை வந்தே
ஏங்கி அழும்போதும் - தாய்
தங்கியிருக்கும் அந்த நிழலே நமக்குத்
தரிப்பிடமாய்ச் சேரும்.

1973

## தன்பலப்பு

பாதையின் குறுக்காகப்
படுத்திருக்கும் துலாக்கம்பின்
மீதே கை வைத்து ஒருவர்
மிடுக்காக நிற்கின்றார்!

''கைம் பெண்மகனே நான்!
கள்ளி இல்லை தங்க வாப்பா!
ஐம்பது சதம் கொத்துக்கு
ஆதாயம் என்பதனால்
பத்துத் தியாலயங்கள்
பசி நூரும்; பிள்ளைகளுக்கு
மொத்தமாய் இம்மாரி
முடியுமட்டும் இவ்வளவுதான்
விட்டுவிடு ராசா!'' என
விழிநீர் சொரிகின்றாள்!

கட்டுப்பாட்டை மீறிக்
கடத்திவரும் நெல்அரிசியை
பிடிக்கும் பெரியரில் அப்
பெண் அழுது கொண்டிருந்தாள்

''துடித்தாலும் மனுசி இதில் ஒரு பிடி
தரமுடியா
இருட்டிவிட்ட வேளை உன்
ஊருக்குப் போ! போ!''
மிரட்டலினைக் கேட்ட அவள்
உருட்டி விட்ட கல்லானாள்.

பாதையின் குறுக்காகப்
படுத்திருக்கும் துலாக்கம்பின்
மீது கை வைத்தபடி
மீண்டும் அவர் நிற்கின்றார்

பேஜோ கார் ஒன்றுவந்து
பிரேக் போட உள் இருந்த
ஆஜானுபாகனிடம்
அவர் ஏதோ கிசுகிசுக்க
என்வலப்பொன்றை
எடுத்துக் கார் உள்ளிருந்தே
தன் பலப்பைக் காட்டிப் பின்
தரை இறங்கி நிற்கையிலே
தடைக்கம்பப் பெண்ணாள்
தயவுடனே
கடத்தல் நெல் லொறிக்குக்
கட்டவிழ்ந்து வழிதிறந்தாள்

பாதையின் குறுக்காகப்
படுத்திருக்கும் கம்புமகள்
ஏதேனும் கொடுத்தால்தான்
எழுந்து இடம் தருவாளோ?

1974

## காட்டுங்கள் என் சிரிப்பை

பறந்துவிட எந்தன் உயிர்
பழுதான யந்திரத்தைக்
கழுவுங்கள் கபன் இடுங்கள்
காட்டுங்கள் என் சிரிப்பை

தொட்டிலிடை வைத்தெடுங்கள்
தோழமையாய் ஆட்டிடுங்கள்
வெட்டி வைத்த மணவறையுள்
வைத்திடுங்கள்
மீசான் கட்டைகளை நாட்டுங்கள்
கபுர் மண்ணைக் கூட்டிடுங்கள்
மண்மகளைக் கட்டிக் கலந்து
கனிந்து அயர்ந்து உறங்குகையில்

விட்டு விலகாத விதிபெறுவோம்
வியர்த்தும் போவோம்; காதல்
ஒட்டுறவால் சங்கமித்து நான்
அவளாகிப் போவேன்.

பட்டந்தருவார்கள் எனக்கு
மண் என்று
ஒரு கட்டாந்தரையைக் காட்டி
அப்பொழுது அம்மண்ணை
வெட்டி எடுத்து விருந்திடுங்கள்
பயிர்களுக்கு.

கண்ணடி மண் நெற்தாயின்
காலடியைச் சேர்ந்திடுமா?
சின்னி விரல் மண்ணினை ஓர்
சிறு குரக்கன் ஏற்றிடுமா?
என் உடம்பின் எல்லா
இழையங்களும் மனிதர்
உண்ணும் பயிர் செழிக்க
உதவிடுங்கள்! நன்றி சொல்வேன்

எந்த மனிதனுக்கு அந்த
உணவு என்று எனைக் கேட்டால்
நொந்து நலிவோரின்
நோவினைகள் மாய்க்க எழும்
அந்த மனிதனுக்கே
அணுவேனும் உதவிசெய்ய
எந்தன் உடல் மண்ணை
எருவாக ஆக்கிடுங்கள்.

1974

*மீசான் கட்டை - புதைகுழியின் மேல் அடையாளமாக நடப்படும் கட்டை*

*கபன் - மரணித்த உடலுக்கு அணிவிக்கும் ஆடை*

*கபுர் - புதைகுழி*

# இரணக்கோல்

காக்கா! அக்கம்புதன்னைக்
காலால் மிதிக்காதே
ஏக்கம் மிகுந்த எங்கள்
இரணக் கோல்! கதிரடிக்கும்
கம்புதான் எங்களினைக்
காக்கும் படை; அதுவே
நம்பிக்கை தரும் ஒரு கோல்
நாளை சில பேர்க்குச்
சூட்டுக் கோல் ஆகிடலாம்
சுரணை வருமட்டும் எங்கள்
பாட்டைச் சுரண்டுபவர்
பழிவாங்கப் படுவர் இந்
நீட்டுக் கோல் அவர்களது
நெஞ்சைத் திருத்திடலாம்
காட்டாதே பல்லைச் சே!
காக்கா உன் காலை எடு.

1974

## இரத்தமணி

அழிந்து போகும் சடலம்
ஒரு அறப் போரிலே
மடிந்துவிடுமென்றால்
நான் மகிழ்வடைவேன்.

கடல் மகளின் மடிகனிந்த
கிளிஞ்சலுக்குள்
ஒளிக் கதிர் பரப்பும் மணி என
நான் திகழ்வதிலும்
உடல் பிழிந்தே உணவளிக்கும்
உயர் மகனின் துளி
வியர்வை என மடிவதில்
நான் மகிழ்வடைவேன்

வியர்வை மணி அணிந்தவனின்
விழி பனித்தால் இங்கு
வெகுண்டெழுந்தே
சமர்க்களத்தில் பொருதி வெல்லும்
உயர் மனிதன் உடல் தனிலே
பெருக்கெடுக்கும் சிறு
இரத்தமணியாகிடில் நான்
இனித்திறப்பேன்.

1974

## சிறுக்கி

முக்காட்டுத் தொங்கலோடு
முன் உசப்பில் கை இருத்தி
சொக்குகளில் மேயும்
சுடர்விழியைப் பாதி செய்து
வக்கா வரம்பில்
வடிவெடுத்து நடப்பதுபோல்
சேலை சிக்கி நடை பயிலும் சிறுக்கி
என் மூத்தமகன்
உன்னை விரும்புவதாய்
ஒரு வார்த்தை சொன்னால் நான்
இன்றே உன் வீடுவந்து
இணக்கத்தைக் கேட்டிடுவேன்.

1975

## எண்ணம் இருக்கை தரும்

வண்ணச் சிறுபூவே! எங்கள்
வாசல் கதவின் அருகில் மலர்ந்துள்ள
வண்ணச் சிறு பூவே!

சின்ன இதழ்களைச் சீராய் அடுக்கிச்
சிவப்பு நிறம் படைத்தாய்! மணச்
செண்டும் தடவிக் கொண்டாய்! உன்னைக்
கண்டு மயங்குகிறோம்
எங்கள் வண்ணச் சிறுபூவே!

இன்னும் சிலநாள் இருப்பாய்! இலாவிடில்
இன்றே மடிந்திடலாம் எந்தன்
எண்ணம் இருக்கை தரும் நீ அதில்
என்றும் நிலைத் திருப்பாய்
எங்கள் வண்ணச் சிறு பூவே!

எத்தனை காலம் நாம் இங்கிருந்தோம் என்ற
மெத்தக் கணக்கெதற்கு
நெஞ்சிலே முத்திரை இட்டவர்க்கு என்றே
சித்தம் தெளிந்தாயோ
எங்கள் வண்ணச் சிறு பூவே!

1976

## நட்டுமை போகவில்லை

புள்ளட வாப்பா! நமக்கிந்தப்
போடியார்கிட்ட வெள்ளாமை வேணா
வெள்ளன சுபஹு'ல வந்தான்
உங்கள விசாரிச்சான் இல்ல எண்டன்
வள்ளென்று நம்மட நாயும் குலச்சிச்சி
வாசல்ல நிண்டவன் உஞ்சில்ல குந்திட்டான்
வெள்ளாமைக்கு ஒரு ஆள் வைக்கப் போறானாம்
விருப்பமாம் உங்கள்ள இஞ்சப் பாருங்க

பிச்சைக்குப் போனாலும் நமக்கிந்தப்
போக்கிரிக் கிட்ட வெள்ளாமை வேணா
கொச்சையாக அவன் என்னைப் பாத்தான்
குடலை எடுத்து மாலையாய்ப் போடணும்
இச்சைப் படுறான் போல என்னில இந்த
இழிச்சவாயன்; ஊர்ஊராய் சிரட்டை நீட்டி
பிச்சைக்குப் போனாலும் அவனுக்கிட்ட இனி
பொழப்பு ஒண்டும் நமக்கு வேணா.

கொள்ளையாக் கதைச்சாங்கா அந்த ஆள்
கோபம் என்டால் பத்திக்கு வந்திச்சு
பிள்ளை ஒன்டுக்கும் சுகமில்லையாம் - அவன்ர
பெண்டாட்டியும் அவட உம்மாட்ட போறாவாம்
வெள்ளிக்கிழமை அதுதான் நாளைக்கு மத்தியானம்
வீட்ட வரட்டாம் ஒரு வேலை இருக்காம்
கள்ளச் சிரிப்பும் அவன்ர கால்ல ஒரு சப்பாத்தும்
வெள்ளாமைக்காரன் பொண்டாட்டி எண்டா என்ன
வேசி எண்டா இந்த நாய் நெனைச்சான்

1976

*நட்டுமை- நெல்வயலில் தண்ணீர் பாய்ச்சி வரவைகளின் வரம்புகள் கட்டியிருக்கும் போது, நண்டு துளைத்தோ அல்லது எப்படியோ நீர் களவாகச் செல்லும் வழி.*

## இன்சுரங்கள்

உன்னைக் காட்டினாய்
உவந்தேன்! நீ இப்பொழுது உன்
கண்ணை விலக்குகிறாய்!
கதை ஓடவில்லை! உனக்கு
என்ன நடந்தது சொல்!
இதயத்தின் ராகத்தை
மண்ணில் விரும்புகின்ற
மனிதன் நான்; பலாத்காரம்
பண்ணும் செயல் எனக்குப்
பழக்கமில்லை! தசைகளினை
உண்ணும் அவாவில் எனக்கு
உவப்பில்லை உன் உணர்வில்
இன்சுரங்கள் பாய்ச்ச
என்னால் முடியுமென்றால்
என் கண்களை உன் கண்களினால்
கவ்வு.

1977

## கனிந்த நிலை

பெண்ணே! உனது வளவுப்
பலாமரத்தின் பழம் தன்னை
உண்ண விரும்பிக் கேட்கவும்
நீ தருவதெனச் சொன்ன பொய்க்கு
வயது ஒரு வருடம்; இனி வேண்டாம்
இன்னுமோர் ஆசை என்னுள்
எழுகிறதே இளைய சில
பிஞ்சுகளாயினும் தா கறிசமைக்க
என அவளோ

''பிஞ்சுப் பருவம் அறுந்து
கனிந்த நிலையில்தான் உங்கள்
கெஞ்சல் இதன் சொந்தக்காரர்
என் வாப்பா! அவர் வயலில்
இங்கு வரட்டும் இனி
நானாகிலும் கேட்டுத்
தருகின்றேன்'' என்னும்போது

நெல்மணிகள் இரண்டு
அளவாக நீண்டகன்று
நெற்றிப் புருவம் என்னும்
கரிய குடை நிழலில்
மெல்ல உமிகள் பிரிக்க
நேர்நோக்கிக்
''கொள்ளவும் நீங்களே வாருங்கள்
ஆள் அனுப்பி
எள்ளவோ விலைகூறி
ஏமாற்றம் தந்திடிலோ
பொல்லாத பாவம் காத்திருந்து
புழுத்து விடும் இப்பழமே''
சொல்லவும் அவள் விழிகள் சோரவும்
அவன் மனத்துள்
சுள்ளென்று குத்தியதே
சுவைமிகுந்த பலாப்பழத்தின்
முள்ளொன்று.

1977

## தங்கம்மா

பொங்கும் துயரங்கள்
பொசுங்கும் முகத்தோடேன்
தங்கம்மா இந்தத்
தனி மரத்தின் கீழ் அமர்ந்தாய்...?

ஆஸ்பத்திரி வாகை
அடி நிழலில் நீ இருந்து
காச நோய் வாட்டைக்
கவனமாய்ப் பார்த்திருந்தாய்!
பன்னிரண்டு மணி இன்னும்
ஆகவில்லை போலும்
உன்னை விட மாட்டார்!
மணியோசை காத்திருந்தாய்!

ஆண் துணையா கூட்டிவந்தாய்?
இவன் உன் ஆறாவது மகனா... ?
ஏன் ஏன் சிணுங்குகிறான்... ?
இடித்திடித்துக் கேட்பதென்ன ?
பிஞ்சு மகன் முந்தானைப்
பிடவை தனைப் பிடிக்க
கெஞ்சுகிறாய் கண்களினால்
கேட்கமாட்டான் போலிருக்கு !

கண்ணைக் கசக்குகிறான் !
காலை உதறுகிறான் !
இன்னோர் முகத்தை அவன்
எனக்குள்ளே காட்டுகிறான் ?
உன் மகளார் அச்சும்மா
ஓ! அந்த மடிந்த மலர்
தன்னுடைய தோற்றத்தைத்
தம்பியிலும் பதித்தாளோ... ?
கொச்சை உலகம் அன்று
கொன்றழித்து விட்ட உந்தன்
அச்சும்மா எந்தனது
அகத்தினிலே தோன்றுகிறாள் !

குச்சுகளாற் செய்த இரு
கைகளும் சூம்பற் கால்களும்
பச்சையமே இல்லாது
பழுப்பேறிப் போன இலைமேனியும்
போர்வாள் இரண்டு
பொருதவரும் காட்சி சொல்லும்
காறை எலும்புகளும்
கதை பயிலும் இருவிழியும்
பறட்டைத் தலையும் அதில்
பழஞ்சீலைப் பூமுடிச்சும்
வரண்ட குறுஞ்சிரிப்பும்
வயிறு சிறு முட்டியுமாய்
பாலர் வகுப்பில் நான்
பார்த்தேன்! ஓர் ஓரத்தே
காலிற் சிறு சிரங்கைக்
கைவிரலால் என்ன செய்தாள்!

பள்ளிக்கு வருவாள்! ஓ!
பலவேளை நீ வருவாய்
பிள்ளைக்குச் சுகமில்லை
பெரிய ஆஸ்பத்திரியில்
சொல்ல வந்தேன் என்று சொல்லிச்
சோகங்கள் சொல்லிடுவாய்

செல்லரித்த வாழ்க்கையதன்
சிதவல்களைக் கண்டிருந்தேன்!

நல்ல வயிற்றிலிந்த
நரம்பு பிறந்திருந்தால்
இல்லாமல் நோய் இவளே
எழுந்திருப்பாள்! நான் மற்றப்
பிள்ளைகளைப் பார்ப்பதுவா - இவள்
பிணி தன்னைப் பார்ப்பதுவா?
நெல்லுப்பாய் உழைப்பாலும்
நீங்காத பட்டினியே
இப்படியாய்ச்
சொல்லியதும் நீதான்
சுடு மனத்துள் நீறுபூத்த
கொள்ளியினால் ஆ! நீ இக்
குவலயத்தைச் சுட்டெரித்தாய்!

நல்ல வயிறும் இந்த
நாட்டில் சில பேர்க்கா.....?
இல்லையடி தங்கம்மா
இனி அதனை மறுதலிப்போம்
என்றுரைத்த வார்த்தைகள்
இன்னும் பலிக்கவில்லை
அன்றையத் தினத்தை விட
அயர்வுடனே தோன்றுகிறாய்!

எத்தனை இடங்களை
ஊசிநூல் கொண்டு நீ
தைத்திருக்கின்றாய்! சேலைத்
தலைப்பு மட்டும் தெரியலையா....?
இத்தனைக்குள்ளும்
உனக்குள்ளே ஒளிந்திருக்கும்
மெத்த சோகம் கலந்த
மிருதுவும் முகவெட்டும்
வைத்திருக்கின்றாய்! அந்த
வழிப்போக்கன் உன் முகத்தை

எத்தனை முறைகள் திரும்பி
எதைப் பார்த்துச் செல்கின்றான்?

கண்ணைக் கசக்கித்தன்
காலை உதறிய உன்
சின்ன மகன் தார்ரோட்டைச்
சேர்ந்தாற்போல் ஒதுங்குகிறான்!
வந்த ஒரு மனிதரிடம்
வலக்கரத்தை நீட்டுகிறான்!
உந்தன் இளைய பயிர்
ஒரு வழியைக் காண்கிறதா....?

மணியோசை கேட்கிறது
மகனை நீ கூப்பிட்டாய்,
பிணியாளர் தனைப் பார்க்கும்
மனிதரிடை கலக்கின்றாய்!

கட்டில் அருகில் வெறும்
கையோடு நிற்கின்றாய்
தட்டைப் பீங்கானில் ஒரு
பாண்துண்டு தெரிகிறது!
சின்னவனின் கையில் அது
சேர்கிறது... தந்தையினை
உன்னிப்பாய்ப் பார்க்கின்றான்
ஓ! அவரும் அணைக்கின்றார்!

கம்புகளால் கைகாலும்
காசநோய்க் கிருமிகளின்
துன்பியலைத் தாங்கும்
விலா எலும்புக் கூட்டோடும்
தன் மனையாள் முகம் கண்டு
தழும்பும் விழியோடும்
அம்மனிதர் உனக்கென்ன
ஆறுதலைச் சொல்லிவிட்டார்.....?

அங்கு மணியோசை
அதட்டல்! ஏ! தங்கம்மா
எங்கே நீ போகின்றாய்....?
ஏன் வெறித்துப் பார்க்கின்றாய்...?

என்ன இது? நீ தானா?
ஏனிந்தச் சனங்களிடைக்
கன்னங் கறுத்துக்
கால் தளர்ந்து போகின்றாய்!
இமையை உயர்த்துகிறாய்
என் விழியைச் சந்தித்தாய்
குமையும் மனத்திடையே
குறுநகையை வரவழைத்தாய்!
என்ன சிரிப்பு இது
எத்தனை பெரிய சோகம்.....?
மின்னலாய்ப் பாய்ச்சிப்பின்
மீண்டும் நீ கூம்பிவிட்டாய்!
தங்கம்மா உன்னுடைய
சட்டை பிய்ந்து போனதென்ன?
அங்கோர் கொடு நகத்தின்
அடையாளம் தெரிவதென்ன?

உன்னுடைய வீட்டுக்குள்
ஊரே ஒதுங்கிய தாம்
கண்குளிர உன்னுடைய
களவை அறிந்தார்! உன்
குச்சிக் குடிசைக்குள்
எப்படியாய் இந்தக்
கொச்சிக்காய் வியாபாரி- உன்
கூட்டுறவைப் பெற்றதுவும்....?
ஒழுங்கை முகப்பக்கம்
ஒரு சிறிய திறப்பெடுத்து
பழந்தகரத்தால் ஒரு
தட்டியினைக் கட்டிவைத்தாய்
புட்டிக்கடை ஒன்றைப்
போட்டு வயிர் வளர்க்கும்

திட்டத்தை அமுலாக்கத்
தெண்டித்த திவர்தானா....?

இச்சனங்கள் உங்கள்
இருவர் தனிமையிலும்
கொச்சை ரசம் கண்டோ
குமுறி எழுந்ததுவும்....?

தார்ரோட்டில் தெய்வத்
தலத்திற்குனை அழைத்து
மார்க்கக் கடனிறுக்க
மனங்கொதித்து வந்தார்கள்!
அச்சும்மா போய் விட்டாள்!
ஆறு குழந்தைகளை
வைத்து விட்டே வீட்டில்
வீதி வலம் வருகின்றாய்.....
உன்னுடைய குஞ்சுகளே
உனைக் காத்துக் கொண்டிருப்பார்
உன்னோ டிருந்தவனை
ஊர்வலத்தில் காணவில்லை!
சட்டத்தரணி வந்து
சரிப்பண்ணி வீடு சென்ற
கெட்டித்தனத்தை நீ
கேட்டறிந்து கொள்வாய்தான்!

ஓதிப் படித்தவர்கள்
ஊர்வலத்தில் கலந்தார்கள்!
நாதியில்லா உன்னை
நடு வீதிப் பவனியிலே
ஊர் சிரிக்கக் காறி
உமிழ சிரட்டை தட்ட
தாறுமாறாகத்
தமிழ்பேச என்றெல்லாம்
வீதியிலே உனக்கோர்
விழாவே எடுத்தார்கள்!

சாதுவாய்ப் போனாய் நீ
சாதுவாய்ப் போனாய் நீ.....!

தங்கம்மா உந்தனுக்குத்
தனியே ஒரு விளம்பரந்தான்
தங்கம்மா என்ற பெயர்
எங்கும் பிரபல்யம்!

தெம்பு சிறிதளவு
தெரிகிறதே! உன் முகத்தில்!
தங்கம்மா எங்கே நீ
தனியாகப் போகின்றாய்!

சட்டை பிடவையெல்லாம்
சரிகை மினுங்கி விழி
பட்டுத் தெறிக்கிறதே
பௌடர் மணக்கிறது!

நெற்றி விளிம்பில் அந்த
ஒற்றை நரை! அதனைச்
சுண்டிப் பிடுங்கித்
தூர எறிகின்றாய்!

துப்புரவாய்ச் சற்றே
துவண்ட நடையோடும்
தப்பிதங்கள் செய்யும்
சகாக்களோடும் உன்கணவர்
சின்னராசா என்பவரின்
சீக்கோடும் பெற்றெடுத்த
கண்மணிகள் ஆறோடும்
கனத்திருக்கும் வயிற்றோடும்

இப்போது நீ ஒழுங்காய்
இருக்கின்றாய் என்றிவர்கள்
செப்பியதைக் கேட்டேன் பின்
சேதி ஒன்றும் தெரியவில்லை!

தங்கம்மா என்னை நீ
ஏன் வெறித்துப் பார்க்கின்றாய்!
மங்கிய உன் விழிகள்
மலர்ந்தே இருப்பதென்ன....

கந்தையொடும் ஊத்தைக்
கறை படிந்தும் கையிலொரு
மந்திரக்கோலா? அதால்
மண்ணில் என்ன கீறுகிறாய்....?

கையில் ஒரு பால்பேணி
கம்பும் அதே கையில்
ஐயோ என்றொரு மனிதர்
ஐந்து சதம் வீசுகிறார்!

பஸ்தரிப்பில் நிற்கின்றாய்
வசனங்கள் பேசுகிறாய்
இஷ்டம் போல் அங்குமிங்கும்
ஏனோ திரிகின்றாய்!

பத்திர மாய்ப் போ அவளின்
பக்கத்தால் போகாதே!
கைத்தடியால் நேற்றோர்
கெண்டக்டர் அடிபட்டார்....

பள்ளிச் சிறுமி அவள்
பக்கத்துத் தோழியிடம்
மெல்ல உரைக்கின்றாள்
மேலும் நடக்கின்றாள்...!

எங்கே போகின்றாய் நீ
எதையோ வெறித்துப் பார்த்த படியே
எங்கே போகிறாய் நீ?

1977

# ஆற்றில் ஒரு பூ

ஆற்றில் ஒரு பூ
அனாதையாய்ப் போகிறது
காற்றில் இதழால் தன்
காவியத்தை வரைந்தபடி
ஆற்றில் ஒரு பூ
அனாதையாய்ப் போகிறது

விரிந்த பெரும் ஆறு
மருங்குகளில் மூங்கில்வனம்
மூங்கில் கறுக்கிறது
மேல்வானில் செங்குருதி

செங்குருதி ஆற்றில் அச்
சின்னமலர் போகிறது
எங்குவரை போகின்றேன்
என்று அறியாது போகிறது

தாய்மரத்தைப் பிரிந்த அது
தன் கிளையைப் பிரிந்த அது
ஓயாத நீரோட்டம்
ஒன்றோடு கலந்த அது
ஓடும் நீரோடே தான்
ஓடிக் களித்துவிட

வாடா முகத்துடனே அது
வடிவாகச் செல்கிறது

செடிகொடிகள் வயல்வெளிகள்
சிறு மீன்கள் குருவி இசை
நெடுவானில் ஓவியங்கள்
நிறநிறமாய் இயற்கை எழில்

தண்ணீர் மனம் மயங்கித்
தன்கோலம் இழக்கிறது
அந்நீரே வெள்ளி என
அழகு நிலா சொல்கிறது

மின்னி மின்னிப் பூச்சுகளின்
மினுக்கம் இராக்குருவி
தன்னுடைய கீதங்கள்
தனிமை மன உள்ளோட்டம்
பிரிவின் துயரங்கள்
நிறைந்த நெடும்பயணம்
உறவின் அர்த்தங்கள்
உணரப்படும் பொழுது

ஆற்றில் அதே பூ
அறிவு தெளிகிறது

துன்பம் அகல்கிறது
தொடர் பயணம் இனிக்கிறது
அன்புக் களிப்போடே அதன்
ஆத்மா சிரிக்கிறது

ஆற்றில் ஒரு பூ
ஆனந்தமாய்ப் போகிறது

1977

## அவள்

உறவோடு நோக்கும் இரு விழிகள் குறு
நகையோடு வாழும் இரு இதழ்கள்
நிரையாக ஒளிவைரக்கற்கள் அவை
அரைவாசி வெளித்தெரியும் பற்கள்!

பண்பை வெளிக்காட்டும் மொழியும் இசைப்
பாங்காய் அமைந்து கனிபிழியும்
அன்பைப் பரப்பும் பூ முகத்தாள்
பகுத்தறிவைச் செயல் காட்டும் திறத்தாள்!

அழகை மறைத் தழகு காட்டும் அவள்
ஆடை அணிகள் நிறைவூட்டும்!
உலகம் அவளுக்கு விளங்கும் அது
ஒவ்வோர் அசைவிலுமே துலங்கும்

விருந்தாக்க அவளுக்குத் தெரியும் அதை
மகிழ்வோடு பரிமாறும் உத்திகளும் புரியும்

புரிந்துணர்வின் அலைவரிசை பொருந்தும் அவள்
புத்திக்கு யுக்தி தரும் மருந்தும்

கோபித்துக் கொண்டும் இருப்பாள் கொஞ்ச
நேரம் கழித்து மலர்ந்து சிரிப்பாள்
ஆதியை என்றும் துதிப்பாள் தன்
அன்னை பிதாவை மனதுள் மதிப்பாள்.

குறைகூற அவளுக்குத் தெரியும் அதைக்
குணமாக்கும் வைத்தியமும் புரியும்
நிறை காண்பாள் நீள் ரசனையோடு அந்த
நிலையில் அவள் ஓ! இனிய தேன்; பால்!

உரையாடல் தொடர் இன்பம் பாய்ச்சும்- மன
உணர்வோடு கலக்கின்ற உயிருள்ள பேச்சும்
நிறைவாக வெளிக்காட்டும் முகமும் எந்த
நிலை வந்த போதிலும் சிணுங்காத மனமும்

இன்பத்தை அழைக்கின்ற நெஞ்சம் வரும்
இடர்களும் துயில்கொள்ள அது நல்ல மஞ்சம்!
தன்னை அவள் தனக்குள்ளே காண்பாள் ஒரு
தவிப்பு அவளுக்கு உயர இன்னும் மாண்பால்!

ஆண்மைக்கு ஒளியூட்டும் தன்மை அவள்
அனுதினமும் சக்தி தரும் உயர்வான பெண்மை
காண்பவர்கள் கனம் பண்ணும் அழகு ஒரு
கலைஞனுக்கு வாய்த்திட்ட கனிவான உறவு.

காதலுக்கு அவள் வந்து பிறந்தாள் ஒரு
காவியத்தின் நாயகியாய் அவள் இங்கு சிறந்தாள்
ஏது இனி அவளுக்குச் சாவு? இதயத்துள்
உணர்வாக உயிர்வாழும்போது.

1977

## ஜீவிதக் கோலம்

தூரம் தொலை போகிறேன்
என் சின்னப் பூனைக் குட்டியே!
நீ பாரமில்லை! ஆனாலும் நான் செல்லும்
பாதையில் எப்படிக் கூட்டிச் செல்லலாம்.

விட்டகலப் போகும் வீட்டினையே இயன்ற மட்டும்
துப்புரவு செய்துவிட்டேன்! கடைசிமுறையாகத்
தொட்டடைக்கின்றேன் ஜன்னல் கதவுகளை
திறப்பால் பூட்டினால் இனிப் பயணம்தான்
வாசல் கதவை அடைக்க வருகிறேன் ஓ!
வருத்தம் கலந்து நீ 'மியாவ்!' என்றழைக்கிறாய்
பாசம் அறுந்தவன் போகிறான் என்றா உன்
பார்வையால் துயரக் கவிதை படைக்கிறாய்?

கறுப்பும் வெள்ளையும் கலந்தவள் நீ! உன்
கண்களைப் போலவே மாணிக்கம் கண்டுள்ளேன்
சுறுசுறுப்பாகவே வளைய வருவாய் உன்
துயரக் கதைகளும் என்னிடம் சொல்வாய்
அருகில் பஞ்சாய் இளம் சூட்டோடு
அணைய வருவாய் அயர்ந்தும் போவாய்
அரவம் இல்லாத நடையிலே இன்னும் பல
ஆற்றல்களிலே அறிவுகள் பெற்றேன்
தெரியவே இல்லை நாம் விரைவிலே பிரியும்
விதியை உடனே வழிபார்த்தோமா?

கனக்கக் கதைகள் நமக்குள்ளிருக்கலாம்
காலம் அதற்கு இடம் தருமா இனி?
மனக் கவலைகளை விட்டொழி என்கிறேன்
மாறாக நீ ஏன் ஒப்பாரி வைக்கிறாய்?

வெளியே வா என்று உன்னை அழைக்கிறேன்
வீட்டுள்ளே நீ சுருண்டு படுக்கிறாய்
பழியே இல்லாது என் பயணம் தொடருமா?
பார் இதோ வாழ்வில் நம்பிக்கை வை நீ

உறவை நமக்குள் பின்னிய கலைஞனின்
பரிவே உனக்குச் சாஸ்வதமானது
சின்னப்பூனைக் குட்டியே உனது
ஜீவிதக் கோலம் நான் அறிந்ததுவா?
உன்னைப் பிரிதல் துயரம்! அதை உன்
உள்ளம் அறியும் நியதி இதுவாம்

இடமாற்றம் எனக்கு முடிவாகிவிட்டது
இனிநான் போதல் தனிவழியாகும்
அடியே ஏன் நீ இப்படிப் பார்க்கிறாய்?
அன்பின் நினைவுகள் நித்தியம், வருகிறேன்.

1978

## கன்னிவெயில்

மாரி முடிந்து வளவிற்குள் வந்த வெயில்
வடிவாய் இருக்கிறது
காய்ந்து கிடந்த மாதுளை துளிர்த்து
சிவந்து சிரிக்கிறது
கோழிக் குஞ்சுகள் வாசலில் அழகாய்
கொத்தித் திரிகின்றன.
நெல்லுப் பாய்கள் வெயில்பட்டுத்
தங்கம் அணிகின்றன
ஈரம் இனிக் காய்கிறதென்று
குருவிகள் சொல்லுகின்றன
கூதல் ஓடிய பாக்கள் தளர்ந்து
தறிகள் ஒலிக்கின்றன
கன்னி வெயில் என் திறந்த மேனியில்
காய்ந்து இனிக்கிறது.

1978

## அறம் அதுவே

பட்டாம் பூச்சொன்றுனது
சட்டையிலே குந்திட நீ
சுட்டு விரல் கூட்டிச்
சொடுக்கி விட மண்ணில் அது
பட்டுத் துடிக்கும் அந்தப்
பரிதாபம் கண்டுவிழி
சொட்டுகின்ற நீருக்கென்
சோபனங்கள்! சோபனங்கள்!
ஆனாலும்
நன்றே நீ பாடுபடும்
நஞ்சையிலே உள்ளபயிர்
உண்டும் அழித்தும் உன்னை
உபாதைப் படுத்துகின்ற
பன்றியினைக் கொல்வதிலே
பரிதாபம் காட்டாதே!
புன்மையினைச் சங்கரிக்கப்
புறப்படுவாய்! அறம்அதுவே
தன்மையொடு நில் எங்கள்
தீரமுள்ள வாலிபனே!

1979

## துயர்கலந்த தேன்

பூத்துக்குலுங்கும் மரமே! உன்னை விட்டுப்
போகிறேன் போம்பொழுதில்
நேத்திரம் கனத்துப் பனிக்கிறது
நெஞ்சில் ஒரு நினைவுச்சுடராய்ப் பதிந்துவிட்டாய்.

பூத்த நீ இனி கன்னிகட்டிக் காய்ப்பாய்
பொன் நிறத்தில் பழம் தருவாய்
நீண்டு தொடரும் என்னுடைய பிரயாணத்தில்
மீண்டும் உன்னைக் காணவர முடியாது போய்விடலாம்
ஆனாலும் உன் நினைவு நெஞ்சமெல்லாம்
துயர்கலந்த தேனாகப் பாயும் தினம்

1979

## உரையாடல் இன்பம்

உரையாடல் இன்பமுறும்
உறவைத்தா! எங்கள்
உரையாடல் தொடர் அன்பில்
பொறியாக அருள் மின்னும்
செறிவான உணர்வோட்டம்
செயலாக உருமாற்றம்
உரையாடல் இன்பமுறும்
உறவைத்தா!

உலகத்தின் கூறுகளை
ஒவ்வொன்றாய்த் தனித்தனியே
விளங்க முயல்கின்ற
பெரு விருப்புடனே மனம் கலந்து
தன் மனத்தின் மற்றவரின்

தனித்தனி மனங்களது
பின்னல்களைத் தரிசித்து
பிரித்து முடிந்து இணைக்கும்
வன்மை பெறும் தன்மை நிறை
வழியின் பரீட்சைகளில்
உண்மை ஜெயம் பெறவே
உரத்த சிந்தனையாய் அமையும்
உரையாடல் இன்பமுறும்
உறவைத்தா!

பேச்சுக் குணம் சுவைத்து
பித்தாகி வித்தாகும்
மூச்சுகளால் ஒன்றி
இன்னும் முன்னேற எங்களுக்குள்
கதை பொருந்தி வந்து செழும்
காதல் கனிந்து அதால்
புதிய நறுஞ் சிந்தனைகள்
பிறந்து செயல்களுக்கு

விதையாகும் வகையாகும்
விதியாகும்படி அமையும்
மதிஞானம் அன்புமனம்
மரியாதைப் பண்பு கொண்ட
உரையாடல் இன்பமுறும்
உறவைத்தா!

கலங்குவதும் எனக்குள்ளே
எண்ணக் கருச்சிதைவு செய்வதுவும்
விளக்குவதே இங்கு
தொடர் வேலையாய் அமையாத
உரையாடல் இன்பமுறும்
உறவைத்தா!

1980

## அன்பின் மடிக்குள்

குற்றவாளியாக உன் சந்நிதானத்தில்
குனிந்து நிற்கின்றேன்!
பற்றி எரிந்து பசளையாகட்டும்
பழைய சருகுகளே!

முள்ளந்தண்டை வளைத்துக் குனிகிறேன்
மூச்சுள் உயிர்ப்பின் சுவையை உணர்கிறேன்
மெல்ல நிமிர்ந்து நிலைக்கு வருகிறேன்
மேனி எல்லாமே புல்லரிக்கின்றது.

நெற்றியை நிலத்தில் பதிக்கின்றேன்
இந் நிலையில் எனை ஏற்றுக்கொள்!
சுற்றி அலையும் மனத்தை நெறிப்படுத்தும்
ஒரு சுக்கானைத் தேடிவந்தேன்!

என்னை உனக்குத் தெரியும் அதனால்
உன் சந்நிதானத்துள் புகும் ஒரு தகுதி
என்னுள் இருக்கிறதா....?
உண்மை அறிவாய்.... உவப்போடு எனை ஏற்பாய்!
மன்னிப்பு அன்பின் மடிக்குள் இருக்கிறது.

நீளமான துயர்களின் மூட்டையை
நினது சந்நிதானத்தில் வைக்கின்றேன்!
ஏலா எனக்கு அவைகளின் பழுவை
இன்னும் இன்னும் சுமக்கவே ஒண்ணா!
நீளமான துயர்களின் மூட்டையை
நினது சந்நிதானத்தில் வைத்தேன்!

ஏற்றுக்கொள் அதை! ஏற்றுக்கொள் அதை!
இனிமேல் என்னோடு இருக்கவே வேண்டாம்!
மாற்றுப் பொருளாய் அவ்விடமெல்லாம்
மணக்கும் உன் அருள் நிறைந்திட வேண்டும்.

தரித்து நிலைத்து தவித்து அழுகிறேன்
தாகம் தீர்க்கும் அருள் நீர் விழைகிறேன்
பெருகும் அன்பில் திளைத்துச் சதாவும்
பேரின்பத்தில் நிலைக்கத் துடிக்கிறேன்.

பாரங்களெல்லாம் அகன்றிடுகின்றன
பஞ்சுபோல மனம் மிதக்கின்றது!
கூற வந்தவை கூற மறந்தேன்!
கூட்டுறவாகும் ஆசை நிறைந்தேன்.

உன்னை அறிவேன்! உவப்போடு எனை ஏற்பாய்
மன்னிப்பு அன்பின் மடிக்குள் இருக்கிறது!
நெற்றியை நிலத்தில் பதிக்கின்றேன் - இந்த
நிலையில் எனை ஏற்றுக்கொள்!

1981

## ஆக்கிலா தந்த மலர்

தாய் :
வண்ண மகனே வா இங்கு
புதுவாசம் பரவுதடா
என்ன மலர் கையில் உனக்கிது
எப்படி வந்ததடா?

கண்ணின் மணியே நீ மறைவாய்ப்
புன்னகை செய்வதும் ஏன்
உண்மையைச் சொல் மகனே
இதை உன்னிடம் தந்ததும் யார்?

மகன்:
வாசமலர் தேடியா உம்மா
அந்த வாசலுக்குப் போனேன்
காசு விசயத்தினைச் சொல்லச் சொல்லிக்
கட்டாயம் செய்தீர்களே!

வீடு விறைத்திருக்க
கதவினில் ஒன்று திறந்திருக்க
பாடல் மிதந்துவர ஊதுபத்தி
வாசம் கமழ்ந்து வர,

கூப்பிட்டபோது உம்மா யாரதென்று
குரலொன்று வந்ததும்மா
வாப்பாவைப் பார்க்க வந்தேன் என்று சொல்ல
வந்து இருங்கள் என்றாள்

உங்கட காக்கா இல்ல
வயலுக்க உழவு நடக்கிறதாம்
உங்கட காக்கா பொண்டி - செப்புக்கொண்டு
ஊருக்க போயிருந்தா

தாய்:
ஆம்புளப் பிள்ள ரெண்டும் போகும்போது
அங்கு இருந்தார்களா?

மகன்:
நான் அங்கு காணவில்லை தண்ணி கேட்க
நாடியும் கேட்கவில்லை.

தாய்:
கேட்கிறேன் என்று சொல்லி மகனே
நீ கேலியாய் எண்ணாதே
ஆக்கிலா நின்றாளா இந்தப் பூவை
அவள்தான் தந்தாளா?

மகன்:
மாமிக்கு என் பரிசு இதனை
மறுக்காமல் கொண்டு சென்று
காணிக்கையாய்க் கொடுங்கள் என்று சொல்லிக்
கடிதினில் ஓடிவிட்டாள்

என்னதான் செய்வேன் உம்மா
உங்களில் இரக்கமாய்த் தந்த
சிறு வண்ணமலர் இதனை
வருகின்ற வழியில் எறிவதுவா?

தாய் :
சேச்சே ! நீ என்ன சொன்னாய்
இது நல்ல செடியினில் பூத்தமலர்
ஆக்கிலா தந்தமலர்
மனசுக்கு ஆறுதல் வந்த மலர்

நல்ல பரிமாற்றம் இது
அந்த நாயனின் சம்மதமே
இல்லறம் வென்றவர்கள் பணக்காரர்
இல்லாமல் போனாலும்

காசு அதிகமில்லை காக்கா
பெரும் மாளிகை கட்டவில்லை
நேசம் மிகுந்தவர்கள் அவர்களில்
நேர்மை இருக்கிறது

தோட்டம் துரவுமில்லை- மற்றவரின்
தோசம் கதைப்பதில்லை
தேட்டம் ஹலாலான சோறுகறி
தின்று வளர்ந்ததுகள்

காணி நிலங்களில்லை ஈமானுள்ள
கல்பு இருக்கிறது

பேணுதல் உள்ளவர்கள் பெருமைகள்
பேசத் தெரியாதவர்

அல்லாஹ்வைத் தொழுபவர்கள்
விளம்பரம் ஆக்க நினையாதவர்
கல்வியும் கொஞ்சம் உள்ளோர்
ஒழுக்கத்தைக் கவசமாய்க் கொண்டவர்கள்

உள்ளதைக் கொண்டு வாழ்வை
மகிழ்வாய் ஓட்டத் தெரிந்தவர்கள்
நல்லா மணக்குதடா இந்தப்பூவை
நடுவீட்டுள் வைத்துவிடு

மகன்:
சுற்றி வளைக்க வேண்டாம்- அந்தரங்கச்
சுத்தியே சொத்து சுகம்
சத்தியமாய் ஏற்பேன் உங்களுக்கும்
சம்மதம் என்று சொன்னால்

தாய்:
கல்பு குளிருதடா! மகனே என்
கருப்பை சிலிர்க்குதடா
அல்லாஹ் கிருபையினால் உங்களுக்குள்
ஆனந்தம் பொங்குமடா!

வாப்பா இருந்திருந்தால்- உங்களுக்கு
வரிசைகள் செய்திருப்பார்
பாக்கள் புனைந்திருப்பார் மனம் பொங்கி
வாழ்த்தி மகிழ்ந்திருப்பார்.

1982

*ஹலால் - ஆகுமாக்கப்பட்டவை*
*கல்பு - உள்ளம்*
*ஈமான் - நம்பிக்கை*

## நிழல்

கொடுவெயில் தனிமையில்
கடற்கரைத் தென்னையின்
நிழலினில் அமர்கிறேன்
நினைவினுள் அழிகிறேன்

சுடுவதேன் முதுகினில்?
நிழல் இதோ இடம்பெயர்ந்துளது!
ஆம் அதன்வழி நகர்கிறேன்
சிறு பொழுதமர்கிறேன்
நிழல் இதோ
இன்னும் சற்றிடம் பெயர்ந்துளது!
நான் நகர்கிறேன்
நிழலொடு தொடர்வதென் நிலைமை
ஓ! வருகிறேன்!

1983

## நிச்சயம்

எத்தனை அழகிய காது உனக்கு
மிக எடுப்பாயிருக்கிறதே
சித்திரக் கோடுகளாகத் தலைமயிர்
முத்தம் கொடுப்பதுவா?
குத்திய காதின் ஓட்டையில்
வேப்பங்குச்சி தெரிகிறதே
பத்திரமாகத் தூர்ந்து போகாமல்
பார்த்துக் கொள்கிறாயா?

நிச்சயம் ஒருநாள் காதணிகள்வரும்
நிலைவரும் என்கிறாயா?
அச்சமயம் உன் காதினைக் காணவும்
ஆசைப்படுகின்றேன்

1984

## உறவு

வெற்றிலைக் கொடி ஒன்று
தேடிக் கிடைத்த வெற்றி!
பாக்கு மரத்தடியில் அதைப்
பதியம் வைத்து விட்டேன்

அந்திப் பொழுது ஒருநாள்
அதைத் தந்தவர்கள் வீடு சென்றேன்
கண்ட கணமே கதவருகில்
நின்ற அவள்
" கொண்டு போன அந்தக்
கொடியின் நிலைமை என்ன?"
என்று கேட்டாள்

"மண்ணுக்கும் கொடிக்கும்
உறவு தெரிகிறது
மறைப்புக்குள் இருக்கிறது
இருதினங்களாகியும்
இலைகள் ஒன்றும் வாடவில்லை"
என்று சொன்னேன்.

கேட்ட அவள் ஒரு நோட்டமிட்டு
"மண்ணுக்கும் கொடிக்கும்
உறவு இனி இனிக்கும் "
சொல்லிச் சிவந்தபடி
என்னை விட்டு ஓடுகிறாள்
ஏன்?

1985

## இற்ற ஓலை

சூரியனின் ஒளிக்கதிர்கள்
இற்றுப்போன ஓலைக் கூரையின் வழியாக
பாரியதாகவும் பருமனில் பல அளவுகளாகவும்
முட்டைகள் செய்கின்றன

ஏக்கத்தோடு அவள் மல்லாந்து படுக்கிறாள்
எதிர்பாராமல் அப்பொழுது அங்கே
தலையில் சிவப்புத் தொப்பியும்
தடாரிப்பும் சிவலை மேனியும் வாலில் பல
வண்ண இறகுகளும் வாலிபமும் கொண்ட
சேவல் ஒன்று கூரையில் சென்று கொண்டிருக்கிறது
இற்ற ஓலைகள் காற்றில் மிதந்து
அவள் முகத்தில் விழுகின்றன.

1986

## தொடும் கலை

இந்த ஹார்மோனியப் பெட்டிக்குள்
எத்தனை ராகங்கள் எத்தனை சங்கதிகள்
வந்தவை எத்தனை வராதவை எத்தனை

நண்டின் நடையாகக் கொண்டு செல்லும்
அந்த விரல்களின் ஆற்றலின் மேன்மையால்
தொடும் கலை தெரிந்து தொடும்போதெல்லாம்
அரும் இசை பொழியும் ஓர் அமுத சுரபியே
அவள்!

1987

## சரி! சிரி

உன்னுடைய அணைப்பிற்குள்
நான் உறைந்திருக்கும்போதும்
என் கண்கள் கசிந்து சுரப்பதற்கு
காரணம் கேட்காதே
என் உயிரில் உரம்பாய்ச்சும்
உன்னை ஒரு பாதியாய்க் கொண்ட
நிறைவு பிழிந்த அமுதத் துளிகள் அவை
வார்த்தைகளுக்குள் அடங்கமாட்டாது
வா! சரி! சிரி

1988

## பிரியம்

பெரும் துயர் பிறக்குச் செய்யும்
பேய்களை எதிர்க்கும் ஒரு போராளியாக
வருந்துவோர்க்கு இரங்கும்
அரும் குணம்படைத்த சிறு வள்ளலாக

அருட் பேறு என்ற அகன்ற வட்டத்துள்
வாழ்க்கை அடக்கமாக
விரிவாய் மனிதன் மற்றும் படைப்புகளை
விளங்கிக் கொண்டு
உறவாய் அவர்களுக்கு
உடன் கிடைக்கும் ஊழியனுமாக
சிறு நோவுதல்தானும்
என்னால் யார்க்குமில்லாத
சீர்மையான உறவு கலந்த
இன்பங்கள் துய்த்து
அதில் உச்சம் கண்ட
நிறைவால் என்னுள் வாழும் மனிதன்
சமநிலையில் மனம் பழுத்து
அறிவு தெளிந்த ஞானத்தால்
அன்பு கனிந்த அனுபவத்தால்
விரைவாய் வீரம் செறிந்து என்னுள்
பாய்ந்துவரும் கவிதை வீச்சை
வரிகளாகவும் இசைவடிவங்களாகவும்
சிறைப்பிடித்துத் தரும் ஒரு மனிதனாய்!
வெளிப்பாட்டின் ஊடகம்
தான் ஒருவன் என்ற
உண்மையின் உள்ளர்த்தம் உணர்ந்தவனாய்
மற்ற மனிதர் என்னை
நோவிக்க முடியாத அளவிலாகிலும்
தேவைகள் அற்றவனாய்
நிறைவான மனமும் பரிசுத்த உடலும் பெற்ற
ஒரு பாலகனாய்
சிறு காலமாயினும் வாழவும்
ஓ! இனிய நினைவுகளால்
ஒரு சிறிய பிரியா விடை பெறவும்
மிக எளிமையாகப் பெறவும்
பிரியப்படுகின்றேன்.

1989

## மன்னிக்க வேண்டும்

இப்போது உடனே
புறப்பட்டு வர முடியாது
மன்னிக்க வேண்டும்
துப்புரவாக வேண்டும் முழுகி உடைகள்
துவைத்து உலர்த்தி அணிய வேண்டும்

கண்ணாடியில் முகத்தைக்
கட்டாயம் பார்க்க வேண்டும்
காட்சி மனதில்
ஒரு நிறைவைத் தரவேண்டும்

என் இனிய ஆத்மக் கலப்புகளோடு
மனம் புணரவேண்டும்
மகிழ்ந்திருந்த சமநிலையின் பின்னர்
அவர்கள் என்
முன்னரும் நடந்து
முறையாக வழியனுப்பும்
அப்போதுதான் எனக்கு ஆசைவர
அதனால் இப்போது உடனே
புறப்பட்டுவர முடியாது
மன்னிக்க வேண்டும்.

1989

## கிளைகளை எப்படி வடிவம் அமைப்பது

மகனே! உன்னை நான்
விட்டுப் போகிறேன்
அழுத்தமாய்க் கால்களை
ஊன்றிக் கொள்வாய் நீ

பிரிவது உலகில் சாஸ்வதமானது
பரிவுகள் துயராய்ப்
பரவுதல் இயற்கை

மரத்தை நட்டவன்
தண்ணீர் ஊற்றலாம்
எருவும் இடலாம்
காவல் செய்யலாம்

கிளைகளை எப்படி
வடிவம் அமைப்பது?
இலைகள் எவ்விடத்தில்
தளிர் விடும் என்பது?

அந்த மரம்
தன் அழகை அது பெறும்
விந்தை நான் அறியேன்
விளக்கம் பெறலாம் நீ

அதனால்தான் ஓர் ஆறுதலோடு
நான் போகிறேன்.

1990

## வாழ்க்கைக் கப்பலில்

அவன் பல அற்பக் குணங்களுள்ள
சாமானியன்
வாழ்க்கைக் கப்பலில்
நம்மோடுதான்
பிரயாணம் செய்ய
விதியாக்கப்பட்டான்
ஏறாதே எனலாமா?
இடையில் கடலுள்
கழுத்தைப்பிடித்துத் தள்ளலாமா?

அவனைப் புரிந்துகொள்
நீ சிறந்து நில்!
சனங்களுள் அதுள் தனிமையில்
பறந்து செல்!
ஒளி நிறைந்து வா

விருந்துவை!
அவனை விளங்கிவை!
கூப்பிடு அவனை
அன்போடு இருக்கச் சொல்

அவன் பல அற்பக்குணங்களுள்ள
சாமானியன்.

1991

## நம்பு கொடி

மொட்டையடித்த வேப்பமரத்தைப்
பற்றிப் படரும் வெற்றிலைக் கொடி நான்

வட்டக் குடையாய்ப் பச்சிலை விரித்து
வந்தவர்க்கெல்லாம் குளிர் நிழல் தந்து
பட்சிகளுக்கு இல்லிடம் கொடுத்துப்
பழுத்துக் காக்கை குயில்களை அழைத்து
விருந்துகள் வைத்து மகிழ்ந்த மரம்
மருந்துகள் ஈயும் சிறந்த மரம் அதால்
மொட்டையடித்த வேப்ப மரத்தைப்
பற்றிப் படரும் பாக்கியம் பெற்றேன்.

அடியும் தடித்து வைரம் பாய்ந்து
அங்கங்களெல்லாம் பட்டை வெடித்து
ஒட்டும் உறவைப் பிசினாய்ப் பிழிந்து
உள்ளோட்டங்களில் வேர்கள் பதித்து
வெட்டை வளவில் ஒற்றை மரமாய்
வெட்டிய கரங்களை விண்ணிடை உயர்த்தி
அனுபவம் முதிர்ந்து அசைவுகள் அற்று
மௌனியாய் நிற்கும் மரம் இது! ஒருநாள்,

வட்டக் குடையாய்ப் பச்சிலை விரிக்கும்
வருபவர்க்கெல்லாம் குளிர்நிழல் ஈயும்
பட்சிகளுக்கு இல்லிடம் கொடுக்கும்
பழுக்கும் காக்கை குயில்களை அழைக்கும்
விருந்துகள் வைக்கும் மகிழ்ந்தும் இருக்கும்
பட்டமரமல்ல இது! வேர்களை ஆழப்பதித்த மரம்
வெட்டைக்கிறங்கும் இலைக் கரங்கள் அசைத்து
இறைவனையே தினம் வணங்கும்! இந்த
மொட்டை அடித்த வேப்பமரத்தைப்
பற்றிப் படரும் பாக்கியம் பெற்றேன்.

1991

# மனங்கள் வெளுத்தே நாம் பேசிடுவோம்

ஒருவரை மற்றவர் மதிப்பதனால்- இங்கே
உருவாகும் நல்ல சமுதாயம்

வருந்திக் கசிந்த கண்ணின் நீரோடை- கொடும்
வன்செயல்களால் மலிந்த பிண வாடை
கரிந்து சரிந்ததுவோ மனமேடை - இங்கு
கடிதில் தொலைத்திடுக போர்ப்பீடை

எரிந்த தடங்கள் எங்கும் தெரிகின்றன - மனித
இரக்கம் எரிந்த சாம்பல் எங்குமில்லை
பறந்து மறைந்து விட்ட அமைதிப்புறா - இந்தப்
பக்கம் வருவதையும் காணவில்லை.

மனங்கள் வெளுத்தே நாம் பேசிடுவோம் - ஒருவர்
மற்றவரைத் தாழ்த்தக் கூசிடுவோம்
சனங்கள் இனும் வருந்தல் நீதி இல்லை - படாச்
சங்கடங்கள் ஒன்றும் இங்கு மீதி இல்லை.

மூன்று இனங்களுமே மனிதர்கள் - இங்கு
நான்கு மதங்கள் கூறும் புனிதங்கள்
ஏன் செயல்பாடாகி எழவில்லையோ - நமக்கு
இறைவன் பகுத்தறிவைத் தரவில்லையோ.

ஒருவரை மற்றவர் மதிப்பதனால்- இங்கே
உருவாகும் நல்ல சமுதாயம்

1992

## தனி ஒரு பழம்

தனிஒரு பழம் நான்
இத் தக்காளிச் செடியில்

பழுத்து விட்டேன்
நேற்றும் பறித்திருக்கலாம் இவர்கள்
இன்று மாலைப் பொழுதாகியும்
ஏன் வரவில்லையோ? என்ன இது?

தனி ஒரு பழம் நான்
இத் தக்காளிச் செடியில்

உண்ணாப் பழமா நான்
ஒருவருக்கும் வேண்டாமோ
வண்ணாத்தி தேன் உண்ட
வழியில் கனிந்தவள் நான்

தனி ஒரு பழம் நான்
இத் தக்காளிச் செடியில்

1993

## மலர்ச்சியாய் இரு!

மலர்ச்சியாய் இரு
எனக்கு மகிழ்ச்சியைத் தா?
விழிச்சுடர் தெறி
என்னுள் வெளிச்சமாய் வா.

நம்பிக்கை வந்தால்
நெஞ்சம் சந்தோசம் கொள்ளும்
சந்தோசம் வந்தால்
புதுச் சிந்தனை துள்ளும்

சிந்தனைகள் ஒன்றாய்ச்
சேர்ந்து குவிந்தால்
வந்து பிறக்கும் செயல்கள்
வாழ்க்கை சிறக்கும்.

மலர்ச்சியாய் இரு எனக்கு
மகிழ்ச்சியைத் தா!

1993

## மறைவின் உறக்கத்தில்

இரத்தினமே!
நீ எத்தனை நீண்ட ஆண்டுகளாக
மண்ணின் மடியுள்
மறைவாக வாழ்ந்திருந்தாய்?
பாதாள அக்கினியுள்
பக்குவங்கள் பெற்றாயா?
ஓ! அந்த மறைவின் உறக்கத்தில்
ஞானத் தவத்தால் ஒளிக்கதிர்கள்
உன்னுள் விளைந்தனவா?

உள்ளொளியைப் பெற்றே
உலகைத் தரிசிக்கும்
வெல்லும் ஒரு வாழ்வை
விரும்பித் தவம் இருந்தாயா?
இம்மனிதர்,
ஆழத்தில் இருளில் உன்னை
அடையாளம் கண்டார்கள்
மெத்த வருந்தி
மண் மண்டலங்கள் கடந்து கண்டெடுத்து
நுட்பமாய்ப் பட்டை தீட்டி
நூதனமாய் ரசிக்கின்றார்.

முற்றாத கல்லாய் நீ
முன்னமேயே வந்திருந்தால்
பெற்றிருப்பாயா இந்தப்
பேரொளியை
மறைவின் உறக்கத்தில்
ஞானத் தவம் செய்தாய் நீ
நல்மணியே!

1994

# ஒன்றே

எ வரும் எனக்கு மட்டும்
உரியவர்கள் இல்லை
என்னை விட்டும்
அவர்கள் தங்கள் உணர்வுகளால்
சிறிதாயும் பெரிதாயும்
விலகி நிற்பார்கள்.

எனக்கும் அப்பால் அவர்களுக்குத்
தனி மன வாழ்க்கை இருக்கிறது
பரிவாக ஆகிலும் அவர்கள் பிரிவார்கள்
அதனால் பரவும்
புரியாத ஒரு துயரம் - முடிவு
முடிவில்லா மன ஒடிவு

பிரியாத உறவும் அலையாத மனமும்
அடைந்து சதா ஆனந்த மயமாகி
உருகிக் கரைந்து ஒன்றோடு ஒன்றாகி
ஒன்றே என்று இருப்பதற்கு உன்னையல்லால்
ஒன்று இருக்கிறதா?

1994

## துளசி

துறைநீலாவணையிலிருந்து
ஒரு துளசிச் செடி கொண்டு வந்தேன்
வேர் நொந்து போகாமல் நீர்வார்த்து
ஓரமாய்க் கெல்லி ஈரமண்ணோடு
உசுப்பாமல் கொண்டுவந்து
எங்கள் இல்லம் இருக்கும்
கல்முனைக்குடி மண்ணைக் கெல்லி
அதன் உள்வைத்தேன்
அம் மண்கள் கலந்தன; மனிதரைப் பழித்தன
துளசியின் இலைகள் என்னைப் பார்த்து
மெல்லச் சிரிக்கின்றன.

1994

## ஈர்ப்பு

தூசி துப்பரவான ஒரு சின்ன வீடு
எளிமை, கலையழகு ததும்பும்
அலங்காரச் சீர்மை

தோட்டத்துப் பூக்கள் வீட்டுக்குள்
சிலவற்றில் சிறு வண்டுகள்
இடையிடையே அரும் பொருட்கள்

ஆசனங்களில் புனிதம் அமைதி
இதமான ஒரு குளுமை
தூக்கம் வருவது போல ஒரு சுகம்

ஊதுபத்தி வாசம்
உறைந்த சுகந்த மணம்
அடைக்கலக் குருவிகளின்
காதல் கதைக்காக
எங்கும் நிசப்தம்
அதைக் கலைக்க
தூரத்தில் உள்ளிருந்து
அரிய சங்கீதமாகச் சாரீரம் இனிக்கும்
சிரிப்பொலியின் நாதம்
சேவல் ஒன்றின் கூவல்
அதனோடு சேர்கிறது.

மறைப்பை ஒதுக்கிவிட்டு
ஆசீர்வதிக்க வருபவர் போல
ஓர் அன்னை வந்தாள்
''என்ன காரியமாகத் தம்பியைக்
காணவந்தீர்கள்?'' என்று
கனிவாகக் கேட்டாள்

வந்த கதையை விட்டு உடனே
என் சொந்தக் கதையை
கல்யாணச் சுகம் தேடும் மெய்யுணர்வை
இந்தத் தாயிடம் இக்கணமே
இனம் காட்டலாமா என்று
எண்ணினேன் கரைந்து போனேன்.

1995

## காலம்

கடகடகடவெனக் கடமைகள் புரிவோம்
காலம் கரைகிறது
படபடபடவென அடிகளை வைப்போம்
பாதை விரிகிறது

டிக்டிக் டிக்கென செக்கன் கம்பியும்
சீக்கிரம் நடக்கிறது
டக்டக் டக்கென குறைகளை முடிப்போம்
வெளிச்சம் குறைகிறது.

லப் டப் லப்பென இதயத் துடிப்பும்
தாளம் இடுகிறது
இப்பார் வாழ்க்கை குறுகிவரும்
ஓர் ஒலியும் கேட்கிறது.

1996

## நிலையான நிழல்

மாங்கொட்டை விளையாடும் காலம்
குர்ஆன் மத்ரஸா கலைந்த
ஒரு மாலைப் பொழுது
எங்கள் வெட்டை வளவில்
விளையாடிக் கொண்டிருந்தோம்
கொட்டிய மழை எங்களைத்
தெறித்தோட வைத்தது.

தனித்துப் போனேன்!
ஏன் என் மனம் கனத்துப் போனது?
அந்த வானத்து நீலத்தில்
கொசுவங்கள் வைத்த
சட்டை அணிந்தவள்
சரிந்து சிரிக்கிறாள்
மனதுள் மலர்கிறாள்

ஒற்றைக் காலால் நொண்டிக் குதித்த
அசைவுகள் நெஞ்சில்
பதிவுகள் ஆகின, அழகியல் ஓதின

மழைக் கூதல் எனக்கு
மகிழ்ச்சியாய் இருந்தது
அரைக்கால் சட்டைக்குள்
ஓர் ஆணியும் இருந்தது
நான் சாய்ந்து கொண்டிருந்த
எங்கள் வீட்டுச் சுவரில்
ஒரு காவியம் வரைந்தேன்
'தாஹிறா' என்று

பலகாலம்
அப்பதிவு சுவரில் நிலைத்தது
அதைப் பார்க்கும் போதெல்லாம்
ஒரு சிரிப்பும் தழைத்தது
சுவரை இடித்தனர் புதுமனை கட்டினர்
வரைந்த ஓவியம் அழிந்து போனது
ஆயினும் என்ன?
ஆண்டுகள் பலப்பல மாண்டு போனாலும்
அந்த எழுத்துகள்
அரூபமாய் என்
நெஞ்சில் நிலைத்த நிழல்.

1996

## சந்தோஷம்

சந்தோஷமே வா
உன்னைச் சதா அனுபவித்துச்
சிந்தை கனிந்திருக்கச் சித்தம்
ஆனாலும் எந்த ஓர் ஆத்மாவின்
தூரத்து மூலையிலும்
அதனால் ஓர் துன்பம் நிகழுமென்றால்
வந்துவிட வேண்டாம் நீ
வரவேற்க மாட்டேன் நான்.

1997

## ஹலால்

இந்தப் போகம் முடிந்து விட்டது
இனிநாம் புறப்படப் போகிறோம்
இந்த அந்தரவிடுதியில் பலவிதமான
ஆதரவுகள் செய்திருக்கிறீர்கள்
நன்றி காக்கா! பரண் கம்புகளும்
வண்டியில் ஏறிக் கொண்டன; நீங்கள்
விலா வயல்காரர் முளை எறியும்போது
பொது வரம்பைத் தாண்டி சிலமணிகள்
எந்தன் வயலிலும் சிந்தியிருக்கலாம்
அவைபல மணிகளைத் தந்துமிருக்கலாம்
ஆதலால் காக்கா அவைகளை நீங்கள்
ஹலால் சொல்ல வேண்டும்
வண்டி புறப்படப் போகிறது
சென்று வருகிறேன்! அஸ்ஸலாமுஅலைக்கும்.

1998

ஹலால்- ஆகுமாக்கப்பட்டவை.

## நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் சில

கிழக்கிலங்கைக் கவிதைப் பாரம்பரியத்தில் நீலாவணனுக்கு அடுத்த கால கட்டத்தில் கணிப்பிடத்தக்க ஒரு கவிஞராகத் திகழ்பவர் பாவலர் பஸீல் காரியப்பர்.

1940.05.09 இல் சம்மாந்துறையில் முகம்மது சுபைர் காரியப்பர், பாத்திமா தம்பதியின் மகனாகப் பிறந்த பஸீல் காரியப்பர், பதுளை கார்மேல் கொன்வென்ட் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பின் சம்மாந் துறையிலும் கல்முனையிலும் தன் பாடசாலை கல்வியைத் தொடர்ந்தார். பாணந்துறையின் தொட்டவத்தையில் 1958 முதல் ஆசிரியராகி மன்னார், பேருவளை, சம்மாந்துறை, கொழும்பு, கல்முனை போன்ற இடங்களில் கற்பித்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் தமிழ், ஆங்கில மொழிகளைக் கற்பிப்பதிலும் சித்திரம் வரைதலிலும், இசைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர்.

1960களில் பஸீல் காரியப்பர் தனது நண்பர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கவிதையில் கடிதம் எழுதி அவர்களிடையே 'கவிஞன்' எனப் பெயர் பெற்றார். இவரது ஆசிரியர் கல்முனை கே. ஆர். அருளையா, 'உமர் கையாம்' என்றே இவரை மாணவப் பராயத்தில் அழைப்பாராம். ஆரம்ப காலகட்டங்களில் பஸீல் காரியப்பர் போட்டிக் கவிதைகளிலே அதிகம் ஈடுபாடு காட்டினார். இவரது பிரசுரமான முதற் கவிதை 'உயிர்'. இக் கவிதை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்றது.

1978 இல் கொழும்பு வளாக தமிழ்ச் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டி யில் இவரது 'தங்கம்மா' பரிசு பெற்றது. 'தங்கம்மா' பரிசு பெற்றவுடன் சம்மாந்துறையில் நடந்த பாராட்டு விழாவில் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை,

'கவிஞன் தோன்றிவிட்டான்
பஸீல் காரியப்பர் கண்டீர்' என்று கூறி

'பாவலர்' எனப் பட்டமும் சூட்டி மகிழ்ந்தார். இவரது 'தங்கம்மாவும்', 'அன்னையும்' தனித்தனி சிறுபிரசுரங்களாக வெளிவந்தன. இது தவிர இவரது நூற்றுக்கணக்கான கவிதைகளும் இசைப்பாடல்களும் பிரசுர மாகாது அப்படியே வீட்டில் தேங்கிக் கிடக்கின்றன.

பஸீல் காரியப்பரது கவிதைகள் அவ்வப்போது சஞ்சிகைகள், பத்திரிகை கள், வானொலி, தொலைக்காட்சியில் வரும். தொடர்ச்சியாக எழுதுகின்ற பழக்கம் இல்லாதவர் இவர். இவர் எழுதினாலும் பிரசுரித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாதவர். மற்றவர்களின் தூண்டுதல் களினாலே இவர் கவிதைகள் அவ்வப்போது வெளிச்சத்திற்கு வரும். பொதுசன தொடர்பு சாதனங்கள் இவரை மிகவும் பயன்படுத்த விரும்பின. ஆனால் இவர் தானாகவே ஒதுங்கிக் கொள்வார். பல்வேறு பட்டங்கள் இவரைத் தேடி வந்தன. இந்த அலைகளிலெல்லாம் சிக்கிக் கொள்ளாது 'பாவலர்' என்ற சுமை மாத்திரமே போதும் என்று கூறுகிறார். அதனால் இவர் இன்றும் நம்முள் பேசப்படுகின்றார்.

கவியரங்கக் கவிதைகளில் இவருக்கு ஈடுபாடுண்டு. சிலவேளைகளில் கவிதைகளைப் பாடியும் காட்டுவார். பஸீல் காரியப்பர் குரல் வளம் மிக்கவர். வானொலியில் ஒலிபரப்பாகி வரும் இவரது இசைப்பாடல் களால் இவர் மிகப் பிரபல்யம் பெற்றுள்ளார். இதில் இவருக்குப் பிரபலம் தேடிக்கொடுத்த மிகப் பிரபல்யமான பாடல் 'அழகான ஒரு சோடிக் கண்கள்'.

பெருகிய உணர்வின் இறுகிய இசையோட்டமான சித்திரச் சிறைப்பிடிப் பாக கவிதையைக் காண்கின்ற பஸீல் காரியப்பர், அதனை ஒரு தனிமனித னின் ஆத்மார்த்தமான தினக்குறிப்புப் போன்றது என்கிறார். 'கவிதைகள் மூலம் ஒரு பிரமுகராகிக் கொள்ள விரும்பவில்லை. அது வாழ்க்கை அனுபவத்தின் வார்ப்பு' எனத் தன் கவிதைகள் பற்றி பஸீல் காரியப்பர் குறிப்பிடுகின்றார். சமூக, சமய, தத்துவ அம்சங்கள் பொருந்திய கவிதை களாக இவர் கவிதைகள் திகழ்கின்றன. தான் கண்டவற்றை, அனுபவித்த வற்றை வெகு அற்புதமாக கவிதையாக்கியுள்ளார். இவர் வெறும் கற்பனைப் பிடிக்குள் கனவு காண்பவரல்ல. தான் வாழும் சமூகத்தினது வாழ்க்கை முறையை மிக நுணுக்கமாக இவர் பார்த்தமைக்கு இக் கவிதைகள் பல சான்று சொல்லும். பாவலர் பஸீல் காரியப்பர் எந்த வட்டத்திற்குள்ளும் தன்னை இணைத்துக் கொள்ளாது அன்றிலிருந்து இன்றுவரை தனித்துவமான ஒரு கவிஞனாக - கலைஞனாக வாழ்ந்து வருகின்றார்.

'நறுக்குத் தெறித்தது போன்ற சிக்கனமான சொற்சேர்க்கைக்குள் அழகை யும் இனிமையையும் உயிர்ப்பையும் சிறைப்பிடிப்பது இவரது தனித் துவம்' என்ற மருதூர்க்கொத்தனின் கருத்து மிகப் பொருந்தும்.

மிகச் சாதாரண மனிதர்களுடன் நட்புறவு கொண்டு அவர்களது அன்றாட இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு வாழ்கின்ற பஸீல் காரியப்பர் சமூக, கலை, இலக்கியங்களில் ஆரம்ப காலங்களில் ஈடுபட்டுழைத்து, இன்று தனக்குள்ளே ஒரு நல்ல மனிதனாக வாழ்வதில் மிகுந்த அக்கறை செலுத்தி

அக ஆராய்ச்சியிலும் ஆன்மீகத் தேடலிலும் ஈடுபட்டு வருகிறார். 'நற்பண்புகளை உள்ளடக்கிய அழகிய ஓர் ஆத்மாதான் என் வாழ்க்கையின் தேடல், அதில் ஒரு சிற்றெறும்புக்கும் நிழல் இருப்பது போல என் வாழ்வுக்குப் பதிவு என் கவிதைகள்' எனத் திருப்தி காண்கிறார்.

சம்மாந்துறையில் பிறந்து கல்முனையைச் சேர்ந்த கதீஜா நாச்சியாரைத் திருமணம் முடித்து, தாரிக் என்ற மகனோடும் பாத்திமா, காமிலா, ஜம்ஹுனா என்ற மூன்று பெண் மக்களோடும் கல்முனையின் வாழ்ந்து வருகிறார். இவரது கவிதைகளை இளந்தலைமுறையினர் கட்டாயம் வாசிக்க வேண்டும். ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்தில் பாவலர் பஸீல் காரியப்பரின் கவிதைகளுக்கு ஒரு தனியான இடமுண்டு என்று சொல்வதில் தவறேதுமில்லை.

**றமீஸ் அப்துல்லாஹ்**

***சம்மாந்துறை***
*01.04.2001*

## பிரசுரம் பெற்ற கவிதைகள் பற்றிய குறிப்புகள்

| | | |
|---|---|---|
| படப்பிடிப்பு | - | சிந்தாமணி |
| ஆற்றில் ஒரு பூ | - | தினகரன் |
| தன் பலப்பு | - | தினகரன் |
| சட்டை | - | கலங்கரை (மருதமுனை அல்மனார் மஹாவித்தியாலய வெளியீடு) |
| இல்லா இடம் நோக்கி | - | வீரகேசரி |
| உரையாடல் இன்பம் | - | சாகித்திய விழா மலர் - வடகிழக்கு மாகாணசபை |
| வருத்துவது | - | வீரகேசரி |
| உயிர் | - | இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க தங்கத்தாத்தா மலர் - தினகரன் |
| அரிய பிறப்பு | - | இளம்பிறை கல்வி மலர் |
| ஆக்கினை | - | தினகரன் |
| ஓ! ஒரு பெண்ணாள் | - | சிந்தாமணி |
| துளசி | - | தினகரன் |
| தூரத்து நாதம் | - | தினகரன் |
| எண்ணம் இருக்கை தரும் | - | பிறைத்தேன் 4வது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் கவிதை மலர் |
| தங்கம்மா | - | இளந்தென்றல் கொழும்பு வளாகத் தமிழ்ச்சங்க ஆண்டு மலர் - 1978 |
| ஜீவிதக்கோலம் | - | வீரகேசரி |
| சுடுநீர் விழிமணிகள் | - | ஆசிரியம் உலக ஆசிரியர்தின மலர் - கல்முனை மாவட்ட கல்வித் திணைக்களம் - 1994 |
| இரணக்கோல் | - | பூபாளம் - கவிதை மலர் |
| உயிரைத்தர மாட்டேன் | - | தினகரன் |
| தாய்மையின் தாகம் | - | அகில இலங்கை தமிழ்மொழித்தின விழா சிறப்பு மலர் - 1973 |
| ஹலால் | - | சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கலாசாலை வெள்ளிவிழா மலர் |

குறிப்பு : பிரசுர களம் பதியப்படாத கவிதைகள் முன்னர் எங்கும் பிரசுரமாகாதவை.

## நன்றி

தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தினர்

எம். எல். ஏ. காதர் - உபவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் கா. சிவத்தம்பி - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாநிதி எம். ஏ. நுஃமான் - சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

றமீஸ் அப்துல்லாஹ் - இணைப்பாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன் - இணைப்பாளர்,
தமிழ்த்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

மகள் காமிலா காரியப்பர்

கேசவன் தியாகராஜா

ஏ. எம். றஷ்மி

சிராஜ் மஷ்ஹூர்

**- பாவலர் பஸீல் காரியப்பர்**

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளை, ஈழத்துச் சமூக அனுபவங்களினதும், உணர்முறைகளினதும் வெளிப்பாடுகளாகப் பார்க்கும் பொழுது, ஒட்டுமொத்தமான தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தினுள் இந்தக் கவிதை 'மரபு' ஏற்படுத்தியுள்ள 'விஸ்தரிப்பு' நன்கு தெரியவரும். இந்தத் தனித்துவ முத்திரை நவீன கவிதையுடன் தான் துல்லியமாகின்றது என்பது இலக்கிய வரலாற்று உண்மை.

அந்த 'உணர்முறை'ப்பதிவு நமது கவிதைகளுக்குள் தெரியவரும் முறைமையினை நோக்கும்பொழுது கிழக்கிலங்கைக் கவிஞர்களின் ஆக்கங்கள் மிக முக்கியமானவையாகின்றன.

ஈழத்துத் தமிழ்க் கவிதையின் பன்முகப்பட்ட செழுமைக்கு அவை உதாரணங்கள். அந்தப் பாரம்பரியப் பரப்பில் பஸீல் காரியப்பர் நிச்சயமான இடத்தைப் பெறுகின்றார். கிழக்கிலங்கை வாழ்வுணர்வுகளைச் சித்திரிப்பதன் மூலம் ஈழத்துக் கவிதையுலகில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்கிறார்.

1960கள் முதல் ஈழத்துத் தமிழ்க் கவிதையில் ஏற்பட்ட வளர்ச்சிகள், மாற்றங்கள் ஆகியனவற்றுக்கும் இத்தொகுதி மதிப்புமிக்க ஒரு சான்றாவணமாகிறது.

கொழும்பு
*01.4.2001*